# வானவில்

# VAANAVIL

| இதழ் 140 | ஆவணி 2022 |
|---|---|
| ISSUE 140 | AUGUST 2022 |


# ஆட்சி மாற்ற பசி இன்னமும் அடங்கவில்லை!



இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட வேண்டும் என கடந்த சில மாதங்களாக நடைபெற்று வரும் கிளர்ச்சி, நாட்டில் ஓரளவு ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னரும் கூட அடங்கியபாடாகத் தெரியவில்லை.

இந்தக் கிளர்ச்சி ஆரம்பிக்கப்பட்ட பொழுது முதலில் விலைவாசி உயர்வுக்கு எதிராகவும், பொருள் தட்டுப்பாட்டுக்கு எதிராகவும் என்று சொல்லியே ஆரம்பிக்கப்பட்டது.

பின்னர் அது சில மறைமுக கரங்களால் ராஜபக்சாக்கள் எவரும் ஆட்சியில் இருக்கக்கூடாது என்ற கோரிக்கையாக மாறியது. அதன் காரணமாக முதலில் பிரதமராக இருந்த மகிந்த ராஜபக்ச தனது பதவியைத் துறந்தார்.

பின்னர் கிளர்ச்சிக்காரர்கள் முழு அரசாங்கமும் பதவி விலக வேண்டும் என்ற கோசத்தை எழுப்பினர். அதன் காரணமாக முழு அமைச்சரவையும் பதவி விலகி ஐக்கிய தேசிய கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராகக் கொண்டு இடைக்கால அமைச்சரவை ஒன்று அமைக்கப்பட்டது.

இதற்கிடையில் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவும் பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கையை எழுப்பிய கிளர்ச்சிக்காரர்கள் வன்முறைகளில் ஈடுபட்டு பல ஆளும் கட்சி அரசியல்வாதிகளின் வீடுகளைத் தீயிட்டுக் கொளுத்தியதுடன் (பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் வீடு உட்பட) ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் உட்பட சிலரைக் கொலையும் செய்தனர். அத்துடன் ஜனாதிபதி மாளிகைக்குள்ளும், பிரதமரின் வாசஸ்தலமான அலரி மாளிகைக்குள்ளும் பலவந்தமாகவும் புகுந்தனர்.

கிளர்ச்சிக்காரர்களின் வன்முறைகள் நாளுக்கு நாள் தீவிரமடைந்த அரசாங்கம் வன்முறையாளர்களை அடக்குமுறை மூலம் தடுக்க முற்படாமல் ஜனநாயக ரீதியாகவே நடந்து கொண்டது. இந்த நிலைமையில் நிலைமையை சட்டத்தை அமுல்படுத்துவோர் சரியான வழியில் கையாளுவதற்கு வசதியாக ஜனாதிபதி கோத்தபாய நாட்டை விட்டு வெளியேறியதுடன், தனது பதவியையும் துறந்தார்.

கோத்தபாய தனது ஜனாதிபதி பதவியைத் துறந்த பின்னர் அரசியல் அமைப்பின் பிரகாரம் பிரதமராக பதவி வகித்துக் கொண்டு இருந்த ரணில் விக்கிரமசிங்க தற்காலிக ஜனாதிபதியாகப் பதவி ஏற்றதுடன், பின்னர் பெரும்பான்மை நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன் ஜனாதிபதியாகவும் தெரிவானார்.

இந்தச் சூழ்நிலையில் ரணிலும் தனது ஜனாதிபதி பதவியைத் துறந்துவிட்டு வீட்டுக்குப் போக வேண்டும் என கிளர்ச்சியாளர்கள் இப்பொழுது கோரி வருகின்றனர். இந்த இடத்தில் ஒரு விடயத்தைக் கவனிக்க வேண்டும். ரணில் விக்கிரமசிங்க அரசியல் அமைப்பை மீறியோ அல்லது வன்முறை மூலமோ ஜனாதிபதி பதவிக்கு வரவில்லை. அரசியல் அமைப்பின் பிரகாரம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் ஜனாதிபதி ஒருவரைத் தெரிவு செய்வதற்கான இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட்ட பொழுது அதில் முறைப்படி போட்டியிட்டே ரணில் அதிகப்படியான (34 மேலதிக வாக்குகள்) பெற்றே ஜனாதிபதியாகத் தெரிவானார்.

ரணிலின் பிரதான போட்டியாளராக சிறீ லங்கா பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த டளஸ் அழகப்பெரும போட்டியிட்டார். அவரை பிரதான எதிர்க்கட்சியான சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி, சிறீலங்கா சுதந்திரக் கட்சி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு, முஸ்லீம் கட்சிகள், மனோ கணேசன் தலைமையிலான அணியினர் மற்றும் சில சிறு கட்சிகள் ஆதரித்தும்

**தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க…**

**நூறு சிந்தனை மலரட்டும்**

# தொடரும் பொருளாதார நெருக்கடியும் சர்வதேச அழுத்தங்களும்

இலங்கையின் வெளிநாட்டுக்கடன், அந்நியச்செலவாணிப் பற்றாக்குறை, எரிபொருள் நெருக்கடி மற்றும் அரசுக்கெதிராக காலிமுகத்திடலில் நடந்த போராட்டம், அதனைத்தொடர்ந்த நாடுதழுவிய வன்முறைகள் போன்றன அண்மைக்காலமாக பிரதான பேச்சுப்பொருளாக இருந்தன. இருந்தபோதிலும் இவற்றிற்கெல்லாம் சளைக்காத வகையில், சீனாவின் யுவான் வாங் 5 (Yuan Wang 5) என்ற விண்வெளி மற்றும் செயற்கைக்கோள் கண்காணிப்பு ஆராய்ச்சிக் (Space and satellite tracking research) கப்பல், அம்பாந்தோட்டை துறைமுகத்தில் தங்கிச் சென்றது, இலங்கையை மீண்டும் இன்னுமொரு நெருக்கடியில் தள்ளியுள்ளது.

ஒகஸ்ட் 11 முதல் 17 ஆம் திகதி வரை சீனாவின் யுவான் வாங் 5 அம்பாந்தோட்டை (Hambantota) துறைமுகத்தில் நிறுத்தப்படுவதாக திட்டமிடப்பட்டிருந்தது. இக்கப்பலின் வருகை, தேசப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்குமென இலங்கை அரசிடம் தெரிவித்த இந்தியா, கடும் எதிர்ப்பையும் பதிவு செய்திருந்தது. ஆராய்ச்சிக் கப்பலெனக் கூறப்பட்டாலும் யுவான் வாங் ஓர் உளவுக் கப்பல். கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளின் விபரங்கள், கடற்படைத் தளங்களின் விபரங்கள் உள்ளிட்டவற்றைக்கூட இக்கப்பலால் பெற முடியுமென அமெரிக்கா தெரிவித்தது. அமெரிக்கா மற்றும் இந்தியாவின் இந்த நிலைப்பாடுகளைத் தொடர்ந்தே சீனக் கப்பல் விவகாரம் பரபரப்பாகப் பேசப்பட்டது.

ஆராய்ச்சிக் கப்பல் சீனாவிலிருந்து கிளம்பிய நிலையில், இந்தியாவின் கடும் எதிர்ப்பு காரணமாக கப்பலின் வருகையைக் காலவரையின்றி ஒத்திவைக்குமாறு சீனத் தூதரகத்துக்கு இலங்கை வெளியுறவு அமைச்சகம் கடிதம் எழுதியிருந்தது. அக்கடிதத்தில், இந்த விவகாரத்துக்குப் பேச்சுவார்த்தை மூலமாகத் தீர்வு காணும் வரை கப்பலின் பயணத்தை ஒத்திவைக்குமாறு இலங்கை அரசு கோரிக்கை விடுத்திருந்தது. இதற்கு மறுப்புத் தெரிவித்த சீன வெளியுறவுத்துறை, இரு நாட்டின் கொள்கைகளில் மூன்றாம் நாடான இந்தியா தலையிடுவது முறையல்ல. அதேபோல இலங்கைக்கும் சீனாவிற்குமிடையேயான ஒப்பந்தங்களின்படி, சீன கப்பல் இலங்கைக்கு வர முழு அதிகாரம் உள்ளதென தெரிவித்தது. அதன்பின் யுவான் வாங் 5 கப்பல் ஒகஸ்ட் 15ஆம் திகதி அம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடைந்து, 6 நாட்கள் தரித்துநின்ற பின்னர் கிளம்பியது.

220 மீட்டர் நீளம், 25.2 மீட்டர் அகலம் மற்றும் ஆயிரம் தொன் பொருட்களை கையாளும் திறன் கொண்ட யுவான் வாங் 5, அதிகபட்சமாக மணிக்கு 37 கிலோ மீட்டர் வேகத்தில் செல்லக்கூடியது. பல கப்பல்களில் இடம்பெற்ற வடிவங்களை ஒருசேர தன்னுள் கொண்டதாக இந்தக் கப்பல் இருக்கிறது. யுவான்வாங் என்ற சொல்லுக்கு சீன மொழியில் "நீண்ட பார்வை" அல்லது "தூர நம்பிக்கை" என்று பொருள் கூறப்படுகிறது. சீன அரசாங்கம், கடல்சார் வான்பரப்பை கண்காணிக்கும் கப்பல்களுக்கு யுவான் வாங் என்று பெயர் சூட்டியிருக்கின்றது. அந்த வகையில் யுவான் வாங் ரகத்தில் நான்கு கப்பல்களை சீனா வைத்துள்ளது. அமெரிக்காவிடம் இந்தவகையிலான கப்பல் 23 உள்ளதாக அறியப்படுகின்றது.

யுவான் வாங் 5 அம்பாந்தோட்டையில் தரித்த விவகாரத்தில் இலங்கைக்கு இந்தியா அழுத்தம் கொடுத்ததாக வெளியான தகவலை இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் மறுத்துள்ளது. அதேவேளையில் இந்த கப்பலால் இந்தியாவுக்கு அச்சுறுத்தல் உள்ளதா என்ற கேள்விக்கும் நேரடியாக பதில் தருவதை இந்திய வெளியுறவுத்துறை இதுவரையில் தவிர்த்து வருகின்றது. இதனிடையே அம்பாந்தோட்டையிலிருந்து கிளம்பிய இந்தக் கப்பல் தற்போது இலங்கைக்கு தெற்கே இந்தியப் பெருங்கடலை ஆய்வு செய்து வருவதாகத் தெரியவந்துள்ளது. இதனையும் ஒருவித சந்தேக பார்வையுடனேயே இந்திய உளவு அமைப்புகள் கவனித்து வருகின்றன.

தென்னிலங்கையில் உள்ள ஆழ்கடல் அம்பாந்தோட்டை துறைமுகமானது அமெரிக்கா, ஐரோப்பா, ஆபிரிக்கா மற்றும் மத்திய கிழக்கு மற்றும் கிழக்கு மற்றும் வட ஆசியா மற்றும் அவுஸ்திரேலியாவிலிருந்து வரும் பிரதான கப்பல் பாதையின் உச்சியில் அமைந்துள்ளது. இத்துறைமுகம் 1.3 பில்லியன் அமெரிக்க டொலர்கள் கடனுதவி மூலம், சீன நிறுவனமான 'சீனா மெர்ச்சன்ட்ஸ் போர்ட் ஹோல்டிங்' (China Merchants Port Holdings) என்ற நிறுவனத்தால் கட்டப்பட்டது. துறைமுகத்தினைக் கட்டுவதற்கான பெற்ற கடனை திருப்பிச் செலுத்த முடியாமல் போன இலங்கை அரசாங்கம், அதனை 2017 ஆம் ஆண்டு கடன் பரிமாற்ற ஒப்பந்தத்தின் மூலம் 99 வருடங்களுக்கு அந்நிறுவனத்திற்கே குத்தகைக்கு வழங்கியுள்ளது.

அம்பாந்தோட்டையிலோ அல்லது இலங்கையின் வேறெந்த துறைமுகத்திலோ கப்பல்களைத் தரிக்க அனுமதி வழங்குவது என்பது இலங்கை அரசாங்கம் எடுக்க வேண்டிய தீர்மானமாகும். இதில் எவரும் மூக்கை நுழைக்க அனுமதிக்க முடியாது. அதேநேரத்தில் இலங்கையில் கடந்த பெப்ரவரியில் பொருளாதார நெருக்கடி தலையெடுத்தபோது, முதல் நாடாக அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான உதவிகளை வழங்கிக் கொண்டிருப்பது இந்தியா. எனவே இலங்கையைப் பொறுத்த வரையில் அயல்நாடான இந்தியாவும், நீண்டகால நண்பரான சீனாவும் அவசியமானவை. இரு நாடுகளுடனும் முரண்பட்டுக் கொள்ளாமல், உறவுகளைப் பேணவேண்டும். இதுவே நாட்டின் எதிர்காலத்துக்கு சாதகமானதாக அமையும் என்பதே இலங்கை தேசபக்தர்களின் கருத்தாகும்.

***தொடர்பு மின்னஞ்சல் முகவரி:*** sunvaanavil@gmail.com

*'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.*

வானவில்

***இணையத்தளம்:*** http://manikkural.wordpress.com/ *இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து வானவில் இதழ்களையும் வாசிக்கலாம்.*

# பொருளாதார அறிவில்லாதவர்கள் நெருக்கடியைத் தவறாக நோக்குகிறார்கள்!

**நாட்**டில் நிலவுகின்றபிரச்சினையை மேலோட்டமாகப் பார்ப்பதன் ஊடாக அதன்ஆழத்தைப் புரிந்து கொள்ள முடியாது. அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவதன் ஊடாகவே நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்க முடியும் என போக்குவரத்து மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன Sunday Observer இற்கு அளித்த பேட்டியொன்றில் தெரிவித்தார். அவரது பேட்டியின் சுருக்கம்

கேள்வி: ஆர்ப்பாட்டங்களை நடத்தியும், அரசாங்கங்களை மாற்றியும் நாட்டில் தோன்றியுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியும் என சிலர் முயற்சிக்கின்றனர். ஆனால் அதையும் தாண்டி நீங்கள் நான்கு முன்மொழிவுகளை வைத்துள்ளீர்கள். இதனை விபரமாகக் கூற முடியுமா?

பதில்: எரிபொருள் மற்றும் எரிவாயு தட்டுப்பாடு மற்றும் மின்சார விநியோகத்தில் உள்ள கட்டுப்பாடுகள் ஆகியவற்றை கவனத்தில் எடுத்துக் கொண்டு பொருளாதார நெருக்கடியின் ஒரு குறிப்பிட்ட அம்சத்தை மட்டுமே மக்கள் பார்க்கிறார்கள். நெருக்கடி என்பது மேலோட்டமாகத்தான் தெரியும். உண்மையான சூழ்நிலையைப் புரிந்து கொண்டு ஆழமான மற்றும் வேறுபட்ட கண்ணோட்டத்தில் அதனைப் பார்க்க வேண்டும்.

கேள்வி: உங்கள் நிலைப்பாட்டின்படி உண்மையான பொருளாதார நெருக்கடி என்றால் என்ன?

பதில்: இன்று நாம் பார்ப்பது சுதந்திரத்திற்குப் பின்னர் ஏற்பட்ட மிக மோசமான பொருளாதார நெருக்கடி. 2001இல் பொருளாதார வளர்ச்சி வீதம் 1.7 சதவீதத்தில் இருந்து −3.5 சதவீதமாக குறைந்துள்ளது. 2022இல் இது −6 சதவீதமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டு மிக உயர்ந்த எதிர்மறையான பொருளாதார வளர்ச்சி வீதத்தைக் கொண்ட ஆண்டாக இருக்கும் என்று புள்ளிவிவரங்கள் நிரூபிக்கின்றன. மொத்தத் தேசிய வருமானம், வேலைவாய்ப்பு, விலைகள், இருப்புக்கள் மற்றும் நாட்டின் முதலீடு போன்ற பேரினப் பொருளாதார



மாறிகளிலும் பாதகமான நிலைமையே காணப்படுகிறது. இது இந்த ஆண்டு உற்பத்தியைக் குறைத்து மக்களின் வருமானத்தில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தி அழுத்தங்களைக் கூட்டும்.

கேள்வி: இந்த நெருக்கடிக்கு முன்னாள் ஜனாதிபதியே பொறுப்பு என்றும், அதனால்தான் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை அகற்ற முயன்றதாகவும் செயற்பாட்டாளர்கள் கூறுகின்றனர். இதைப் பற்றி நீங்கள் என்ன கூற விரும்புகின்றீர்கள்.

பதில்: பொருளாதாரம் மற்றும் யதார்த்தங்கள் பற்றிய அறிவு இல்லாத இளைஞர்கள் குழுவின் பார்வை இது. பொருளாதாரப் பேராசிரியரிடம் கேட்டால், இதற்குக் காரணம் கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியல்ல, மாறாக பொது நிதிமுகாமைத்துவத்தில் ஏற்பட்ட தொடர்ச்சியான தவறுகள் என்று கூறுவார். சுதந்திரம் மற்றும் 1977இற்குப் பிறகு நம் நாட்டின் பொருளாதாரத்திற்கு சரியான முன்மாதிரி இல்லை.

கேள்வி: இந்தக் குற்றச்சாட்டில் நீங்களும் உள்ளடங்குகின்றீர்களா?

பதில்: ஓம். 33 வருடங்களாக பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில், எமக்கும் இப்பொறுப்பில் பங்கு உள்ளது. ஆனால் எனக்கு குறைவான பொறுப்பு ஒதுக்கப்பட்டுள்ளது. இதைப் பற்றி, வரப்போகும் அழிவுகளைப் பற்றி ஏராளமான புத்தகங்களை அச்சிட்டு வெளியிட்டேன். பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் விவாதங்கள் மூலம் எத்தனை உண்மைகளை முன்வைத்தாலும் சிரிப்பும், அவதூறும், கேலியும் மட்டுமே கிடைக்கும்.

கேள்வி: சில அரசியல் கட்சிகள் தங்களுக்கு அதிகாரம் கொடுத்தால் ஆறு மாதங்களில் பிரச்சினைகளைத் தீர்த்து விடுவதாகக் கூறுகின்றன. நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்களா?

பதில்: திறமையான எவருக்கும் ஆட்சியை வழங்கத் தயார் என முன்னாள் மற்றும் தற்போதைய ஜனாதிபதிகள் அறிவித்துள்ளனர். ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியை ஏற்க விரும்புவதாக கூறியதன் பின்னரே சஜித் பிரேமதாச பிரதமர் பதவியை ஏற்க விரும்புவதாகத் தெரிவித்தார். கடந்த மே மாதம் 9ஆம் திகதி கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறையின் போது துப்பாக்கிச்சூடு நடத்துமாறு இராணுவத்திற்கு உத்தரவிட முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விரும்பவில்லை.எனவே அவர் போராட்டக்காரர்களின் கோரிக்கையின்படி கீழே இறங்கினார்.

கேள்வி: இந்த அரசாங்கத்தை தாம் ஏற்றுக் கொள்ளவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். இதில் உங்கள் கருத்து என்ன?

பதில்: அரசியல் ரீதியாக அது அவருக்கு பாதகமான அறிக்கை. தன்னால் முன்மொழியப்பட்ட டலஸ் அழகப்பெரும அதிக வாக்குகளைப் பெற்றுத் தெரிவு செய்யப்பட்டால் அது சரியான ஆணை பெற்ற அரசாங்கமாக அமையும் என அவர் கூறுகிறார். ஆனால் தோற்ற பிறகு ஆணை இல்லை என்கிறார்.

இவ்வாறு நாடு முன்னேறுவது சாத்தியமில்லை. வளர்ந்த நாடுகளில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இப்படி நடந்து கொள்வதில்லை.

கேள்வி: ஏன் எமது பாராளுமன்ற உறுப்பினர்கள் அவ்வாறு நடந்து கொள்வதில்லை என்று கூறுகின்றீர்கள்?

பதில்: நாடாளுமன்றக் குடியரசுவாதத்தைக் கொண்ட நாடு என்ற வகையில், இலங்கை இன்று எதிர்நோக்கும் அனைத்துப் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கும் அறிவொளி பெற்ற நாடாளுமன்றத்திடம்

பதில் தேட வேண்டும். பல நாடுகளைப் போலவே, இந்தியா மற்றும் பாகிஸ்தான் போன்ற அண்டை நாடுகளும் பாராளுமன்ற அமைப்பு மூலம் பதில்களைத் தேடுகின்றன.

கேள்வி: இந்தப் பிரச்சினைகளை பாராளுமன்றம் பொறுப்பேற்க வேண்டும் என்று அர்த்தமா?

பதில்: நிச்சயமாக. அரசியலமைப்புச் சட்டத்தின் 148, 149, 150, 151மற்றும் 152ஆகிய பிரிவுகள் மாநில நிதியத்தின் அனைத்து அதிகாரங்களும் பாராளுமன்றத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளன என்று கூறுகிறது. எனவே, நாட்டில் ரூபாய் மற்றும் டொலர் இல்லாததால் நாடு திவாலாகி விட்டது என்று அர்த்தம். பொதுநிதி என்பது அரசாங்கத்திற்கு வரிவிதிப்பு அல்லது பிறவழிகளில் வருவாய் சேகரிப்பு ஆகும். இரண்டாவது, அரசு ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவது மற்றும் தொடர் செலவுகள். வருமானம் மற்றும் செலவுகளுக்கு இடையே உள்ள இடைவெளியை ஈடுகட்ட உள்ளூர் மற்றும் வெளிநாட்டுக் கடன்களை பெறுதல். சுதந்திரத்திற்குப் பிறகு இந்த பணி பாராளுமன்றத்திற்கு வழங்கப்பட்டது.

கேள்வி: பொது நிதியை பாராளுமன்றம் எவ்வாறு கட்டுப்படுத்துகிறது?

பதில்: பொதுமக்களுக்கு சேவைகளை வழங்குவதற்காக நிதி மேலாண்மை தொடர்பான சட்டங்களை பாராளுமன்றம் இயற்றுகிறது. இப்பணிகளை மேற்கொள்ள நிறுவனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மத்திய வங்கி 1949ஆம் ஆண்டு நாணயச் சட்டத்தின் மூலம் 1950ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. பாராளுமன்றத்தின் அனுமதியுடன் பணத்தை அச்சடிக்கும் ஏகபோக உரிமை மத்திய வங்கிக்கு மட்டுமே உள்ளது. எனவே, கடன் தொடர்பான பொறுப்பு மத்திய வங்கியின் மாநில கடன் துறையிடம் உள்ளது.

பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் முதல் தேர்ச்சி பெற்று, உள்ளூர் மற்றும் வெளிநாட்டு தேர்வுகளில் தேர்ச்சி பெற்று, சர்வதேச பயிற்சி பெற்ற பிறகு இந்தத் துறை அதிகாரிகளை நியமிக்கிறது. அவர்களுக்கு பெரும் சம்பளம் வழங்கப்படுகிறது. பெரும்பாலான மக்கள் இந்த விஷயத்தைப் புரிந்து கொள்வதில்லை. எனவே, மத்திய வங்கியின் பொதுக் கடன் திணைக்களம் கடனைப் பெற்று அதன் பொறுப்பை ஏற்க வேண்டும். ஆனால் இன்று அரசியல்வாதிகள் இதில் ஈடுபட்டுள்ளனர். நாட்டின் திவால் நிலைக்கான காரணங்களை இந்த அதிகாரிகள் விளக்க வேண்டும்.

இரண்டாவது நிறுவனம் நிதி அமைச்சகம். பொதுமக்களுக்காக செலவிடுவது கருவூலமாகும். பட்ஜெட்டை தயார் செய்கிறார்கள். பயிற்சி பெற்ற அதிகாரிகள் கொண்ட ஒரு பெரிய குழு உள்ளது. பட்ஜெட் ஆவணத்தில் உண்மையை நாடாளுமன்றத்தில் முன்வைக்க வேண்டும். திறைசேரி பாராளுமன்றத்தை தவறாக வழிநடத்தி பாரிய தவறுகளை செய்துள்ளது. இலங்கையின் அரசியல் கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் பெரும்பான்மையான பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பொதுநிதி முகாமைத்துவம் பற்றிய புரிதல் குறைவாகவே உள்ளது. ஆளுங்கட்சியாக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சியாக இருந்தாலும் சரி, கடந்த மூன்று நான்கு தசாப்தங்களில் ஒவ்வொரு எம்.பியும் இதற்குக் காரணம்.

கேள்வி: இதற்கு நீங்களும் பொறுப்பு என்று அர்த்தமா?

பதில்: நான் பட்ஜெட் ஆவணங்கள் எதையும் தயாரிக்கவில்லை. கடந்த காலங்களில் வரவு செலவுத் திட்டங்களை முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனவும் பின்னர் கலாநிதி என்.எம்.பெரேராவும் தயாரித்தனர். ஆனால் மற்றவர்கள் தயாரிக்கப்பட்டதை மட்டுமே படிக்கிறார்கள். இது தொடர்பாகப் பாராளுமன்றத்தில் வாதிடுகின்றனர். டொலர்கள் இருந்தால் எல்.சி திறந்து எலெக்ட்ரிக் வாகனம் கொண்டு வந்து அந்நிய செலாவணியை முதலில் செலுத்த வேண்டும் என்று பரிந்துரைத்தோம். நாங்கள் முன்மொழிந்தாலும், மத்திய வங்கி அதிகாரிகள் அங்கீகரிக்காவிட்டால் அதைச் செய்ய முடியாது. அவர்களுக்கு தனி அதிகாரம் உள்ளது. இலங்கையில் டொலர் வைத்திருப்பவர்களுக்கு டொலரில் வர்த்தகம் செய்வதற்கான சந்தை வழங்கப்பட வேண்டும். அப்போதைய மத்திய வங்கியின் ஆளுநராக இருந்த வர்ணசேன ராசபுத்ரவின் காலத்தில், தாங்கி பிணைப்பு முன்மொழியப்பட்டது.

பணமதிப்பழிப்புக்கு ஆளாக நேரிடும் என்பதால் வேண்டாம் என்று கூறினர். எனவே மத்திய வங்கி மற்றும் பிரதமர் அதிகாரிகள் இதற்கான வழியை முன்மொழிந்தனர். எனவே, இந்த அதிகாரிகள் எடுக்கும் முடிவுகளுக்கு அரசியல்வாதிகள் எப்படி பொறுப்பேற்க முடியும்?

# ரூபிள் மூலம் வர்த்தகம் செய்வோம்: ரஷ்யா – துருக்கி உடன்பாடு

**இ**துவரையில் அமெரிக்க டொலர் மூலம் தங்கள் வர்த்தகத்தை மேற்கொண்டு வந்த ரஷ்யாவும், துருக்கியும் தங்கள் வர்த்தகத்திற்கு ரஷ்யா நாணயமான ரூபிளைப் பயன்படுத்திக் கொள்வது என்று முடிவெடுத்துள்ளன.

ரஷ்யாவின் நகரங்களில் ஒன்றாக சோச்சியில் நடந்த கூட்டமொன்றில் இதற்கான உடன்பாட்டில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புட்டினும், துருக்கி ஜனாதிபதி ரிசெப் தய்யிப் எர்டோகனும் கையெழுத்திட்டனர். ரஷ்யா மீது பல்வேறு தடைகளை விதித்த அமெரிக்காவுக்கு இந்த உடன்பாடு பெரும் பின்னடைவாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தடைகளால் ரஷ்யா பாதிக்கப்படும் என்று கருதப்பட்ட நிலையில், தடைகளை விதித்த அமெரிக்காவும், அதற்கு துணை நின்ற ஐரோப்பிய நாடுகளுமே பெரிய அளவில் பாதிக்கப்பட்டு வருகின்றன.

உடன்பாட்டில் கையெத்திட்ட பிறகு செய்தியாளர்களைச் சந்தித்த துருக்கியின் ஜனாதிபதி எர்டோகன், “வர்த்தகத்தை ரூபிளில் மேற்கொள்ள இரு நாடுகளும் ஒப்புக் கொண்டுள்ளன. இந்த சோச்சி பயணத்தில் மிகவும் நல்ல விஷயம் நடந்துள்ளது. ரூபிளைப் பயன்படுத்துவது என்று விளாடிமீர் புடினுடன் ஒப்புக் கொண்டுள்ளோம். நிதி ஆதாரம் என்ற வகையில் இது பயனுள்ளதாக இருக்கும். வர்த்தக உறவை மேம்படுத்தவும் உடன்பாடு ஏற்பட்டிருக்கிறது. இதில் இருதரப்பு அமைச்சர்களும் கையெழுத்திட்டிருக்கிறார்கள்” என்று தெரிவித்தார்.

ரஷ்யா மற்றும் துருக்கியின் இருதரப்பு வர்த்தகத்தின் மதிப்பு சுமார் 10,000 கோடி அமெரிக்க டொலராகும்.

**தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...**

# சுதந்திர நாடு இந்தியா, சுதந்திரமற்றவர்கள் இந்தியர்கள்

இந்தியப்பிரதமர் நரேந்திர மோடி கடந்த சில மாதங்களாகப் பேசும்போதெல்லாம், 'உலகமே நம்மை உற்று நோக்குகிறது...' என்று புதிய பாணியில் பேசி வருகிறார். பிரதமர் இந்தியில் பேசும் உரையில் இது அடிக்கடி இடம்பெறுகிறது. 'இந்தியா உற்பத்திக்கான மையமாகப் பார்க்கப்படுகிறது', 'இந்தியாவின் புத்தாக்கத் தொழில்களே நமது எதிர்காலம்', 'உலகம் இந்தியாவின் ஆற்றலை உணர்ந்து அதன் செயல்திறனைப் பாராட்டுகிறது' என்று அவருடைய இத்தகு சொல்லாடல் தொடர்கிறது.

**உற்றுப்பார்க்கிறது உலகம்**

உலகமே இந்தியாவை உற்றுப்பார்த்துக்கொண்டுதான் இருக்கிறது, மோடி சொல்வதுபோல உயர்வானவற்றுக்காக அல்ல – என்பதை ஆகார் படேல் எழுதியுள்ள 'பிரைஸ் ஆஃப் தி மோடி இயர்ஸ்' (Price of the Modi Years) என்கிற புத்தகம் உறுதிப்படுத்துகிறது. பொருளாதார, சமூக, அரசியல் குறியீடுகளில் ஒரு நாடு எப்படி கணிக்கப்படுகிறது என்று அந்தப் புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இந்த எல்லா அம்சங்களிலும் இந்தியா மிகவும் தாழ்நிலையில் – வாய்விட்டு கதறும்படியான தாழ்நிலையில் – இருப்பதையே அது காட்டுகிறது.

பிரதமர் தனது உரையில் பீற்றிக்கொள்வதற்கு நேர் எதிராகவே இது இருக்கிறது. ஹென்லேயின் பாஸ்போர்ட் அட்டவணையில் (Henley Passport Index) இந்தியா 87வது இடத்தில் இருக்கிறது. உலக பொருளாதார அரங்கு தயாரித்துள்ள மனிதவள மூலதன குறியீட்டெண்ணில் 103வது இடத்தில் இருக்கிறது. ஐக்கிய நாடுகள் சபை தயாரித்துள்ள மனித வளர்ச்சிக் குறியீட்டில் 131வது இடத்தில் இருக்கிறது. இந்தக் குறியீடுகளில் பெரும்பாலானவற்றில், நரேந்திர மோடி பிரதமரான 2014க்குப் பிறகு இந்தியா சரிவையே கண்டுள்ளது.

உலகம் நம்மைப் பற்றி என்ன நினைக்கிறது என்பது முக்கியம். நாம் நம்மைப் பற்றி என்ன நினைக்கிறோம் என்பது அதைவிட முக்கியம். பிரிட்டிஷ் காலனியாதிக்கத்திலிருந்து விடுதலை பெற்ற எழுபத்தைந்தாவது ஆண்டில்,



நம்மை நாமே சில கேள்விகளைக் கேட்டுக்கொள்ள வேண்டும்: இந்தியா எப்படி இருக்கிறது? இந்தியர்கள் எப்படி இருக்கிறார்கள்? ஒரு நாடாகவும் குடிமக்களாகவும் நம்முடைய அரசமைப்புச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள லட்சியங்களை எந்த அளவுக்கு நிறைவேற்றியிருக்கிறோம்? சுதந்திரத்துக்காகப் பாடுபட்டவர்கள் அடுத்துவரும் தலைமுறை மீது வைத்த நம்பிக்கைக்குப் பாத்திரமாக எந்த அளவுக்குச் செயல்பட்டிருக்கிறோம்?

*ராமச்சந்திர குஹா*

நான் 'தேர்தலில் மட்டுமே - ஜனநாயக நாடு' என்று இந்தியாவை 2015இல் வர்ணித்திருந்தேன். இங்கு தேர்தல்கள் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை நடந்துவிடுகிறது, இந்த இடைப்பட்ட காலத்தில் யாரும் யாருக்கும் பதில் சொல்லக் கடமைப்பட்டவர்கள் அல்ல என்ற நிலையே நிலவுகிறது. நாடாளுமன்றம், ஊடகம், குடிமைப்பணித் துறை என்பவை பயனற்றுப் போய்விட்டன அல்லது ஆள்வோருடன் சமரசம் செய்துகொண்டு விட்டன அல்லது ஆளுங்கட்சியின் அதிகார துஷ்பிரயோகம் குறித்து கேள்வி கேட்பதே கிடையாது. இப்போது தேர்தல் மட்டுமே ஜனநாயகமாக இருக்கிறது என்பதையும் திருத்த விழைகிறேன்.

காரணம், தேர்தல் நன்கொடைப் பத்திரம் என்பதில் மூடுமந்திரமே நிலவுகிறது. தேர்தல் ஆணையம் பாகுபாடு பார்க்கிறது. தேர்ந்தெடுக்கப்படும் மாநில அரசுகளைக் கவிழ்க்கவும் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தவும் லஞ்சம் தரப்படுகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் மிரட்டப்பட்டு நெருக்குதலுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். தேர்தலுமே முறையாகவும் நியாயமாகவும் நடப்பதில்லை, தேர்தல் முடிவுகளும் மதிக்கப்படுவதில்லை.

**கருத்துச் சுதந்திரத்துக்கு இடம் இல்லையா?**

எதிர்க்கருத்துகளை ஒடுக்கும் செயலை இந்திய அரசு ஈவு இரக்கமின்றி மேற்கொள்கிறது. அரசின் புள்ளிவிவரங்களின்படியே, 2016 முதல் 2020 வரையில் 'சட்ட விரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம்' என்கிற கொடூர சட்டப்படி 24,000க்கும் மேற்பட்ட இந்தியர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களில் 1%க்கும் குறைவானவர்களே விசாரணை முடிந்து தண்டிக்கப்பட்டனர். எஞ்சிய 99% பேர்களுடைய வாழ்க்கை அரசு அமைப்புகளால் அலைக்கழிக்கப்பட்டு அச்சத்துக்கும் பீதிக்கும் ஆளாக்கப்பட்டுள்ளது. ஊடகங்கள் மீதான தாக்குதல்கள் தீவிரமைடந்துள்ளன. ஆகார் படேலின் புத்தகத்தை இதற்காக திருத்தச் சொன்னால், உலக பத்திரிகைச் சுதந்திரத்தில் 142வது இடத்தில்

இருக்கும் இந்தியா 150வது இடத்துக்கே வந்துவிட்டது என்று திருத்துவார்.

இப்படிப்பட்ட ஒடுக்குமுறையான சூழ்நிலையில், நீதித் துறையின் உயர்பீடமானது குற்றஞ்சாட்டப்பட்ட மக்களுக்கு எதிராகவும், அரசுக்கு ஆதரவாகவும் அடிக்கடி நின்றுகொள்வது ஏமாற்றத்தை அளிக்கிறது. 'மக்களுடைய உரிமைகளுக்கான பாதுகாவலனாக இருப்பதற்குப் பதிலாக, உரிமைகளுக்குப் பெரிய ஆபத்தாக உச்ச நீதிமன்றமே திகழ்கிறது' என்று பிரதாப் பானு மேத்தா சமீபத்தில் எழுதியிருக்கிறார்.

பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான பெரும்பான்மையின அரசுக்கு முன்னால் உச்ச நீதிமன்றம் முழுமையாகச் சரணாகதி அடைந்துவிட்டது என்று அரசமைப்புச் சட்ட அறிஞர் அனுஜ் புவானியா பேசியிருக்கிறார். மோடியின் ஆட்சிக்காலத்தில் அரசின் அத்துமீறிய நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்த வேண்டிய தனது அரசமைப்புச் சட்ட கடமைக்குப் பதிலாக, மோடி அரசின் செயல்திட்டங்களை வரவேற்கும் உற்சாகக் குழுவாக மாறிவிட்டது. அரசின் அராஜகத்துக்கு எதிராக மக்களைக் காக்க வேண்டிய கேடயமாகச் செயல்படுவதற்குப் பதிலாக, அரசின் கையிலிருக்கும் வலுவான வாளாக மாறிவிட்டது என்றும் அனுஜ் புவானியா நீதித் துறையைச் சாடுகிறார்.

அரசியல்ரீதியாக இந்தியர்கள் சுதந்திரத்தன்மையில் குறைந்திருக்கிறார்கள், சமூகரீதியில் அதைவிட சுதந்திரக் குறைவான நிலையில் இருக்கிறார்கள். பிரிட்டிஷ்காரர்கள் இந்த நாட்டைவிட்டு வெளியேறி எழுபத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகு நம்முடைய சமூகம் இன்னமும் குருமார்களின் காலடியிலேயே வீழ்ந்து கிடக்கிறது. சாதிரீதியிலான, பாலினரீதியிலான பாகுபாடுகள் சட்டவிரோதம் என்று இந்திய அரசமைப்புச் சட்டம் 1950லேயே அறிவித்துவிட்டது. அவை இன்னமும் அதே வேகத்தோடு கடைப்பிடிக்கப்படுகின்றன. பொது நன்மை கருதி அரசு எடுத்த உறுதியான நடவடிக்கைகளால் துடிப்பு மிக்க பட்டியலின விழிப்புற்ற வர்க்கம் தோன்றியிருக்கிறது. இருந்தும் இன்னும் பல இடங்களில் சமூக வாழ்க்கையில் சாதிரீதியிலான அடக்குமுறைகளும் விலக்கல்களும் நீடிக்கின்றன.

சாதிகளை ஒழிக்க வேண்டும் என்று பி.ஆர்.அம்பேத்கர் அழைப்பு விடுத்து அனேக ஆண்டுகளுக்குப் பிறகும், சாதி மறுப்புத் திருமணங்கள் மிகக் குறைவாகத்தான் நடக்கின்றன. இந்திய சமூகம் இன்னமும் மரபார்ந்த சமூகமாகவே பின் தங்கியிருப்பதையே இது உணர்த்துகிறது. பாலினம் பொருத்தவரையில் இரண்டு தரவுகள், லட்சிய இலக்கைவிட நாம் எவ்வளவு கீழ்நிலையில் இருக்கிறோம் என்பதைச் சொல்கின்றன.

**கலாச்சாரமும் பொருளாதாரமும்**

முதலாவது, பெண் தொழிலாளர்கள் உற்பத்தி நடவடிக்கையில் பங்கேற்கும் விகிதம். அது வெறும் 20% ஆக இருக்கிறது, வங்கதேசத்தைவிடக் குறைவு (வியட்நாம் – சீனா ஆகியவற்றுடன் ஒப்பிடுவது அப்புறம் இருக்கட்டும்). உலக பாலின வேறுபாட்டு குறியீட்டில் 2022 ஜூலை நிலவரப்படி நாம் மொத்தம் கணக்கிடப்பட்ட 146 நாடுகளில் 135வது இடத்தில் இருக்கிறோம்! சுகாதாரம் மற்றும் நோயிலிருந்து நீங்கி உயிர் வாழ்தலிலும் இதேபோல தாழ்நிலையிலேயே இருக்கிறோம்.

சமூகத்திலிருந்து அடுத்து கலாச்சாரம், மதம் தொடர்பான துறைக்குச் செல்வோம். இங்குமே நிலைமை நாம் பெருமைப்படும்படியாக இல்லை. மக்கள் என்ன சாப்பிட வேண்டும், எதை உடுத்த வேண்டும், எங்கே வசிக்க வேண்டும், எதை எழுத வேண்டும், யாரைத் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்றெல்லாம் அரசும், ஆயுதமேந்திய ஆதிக்க கும்பல்களும் தீர்மானிக்கின்றன.

இவை எல்லாவற்றையும்விட கவலை தரும் அம்சம் எதுவென்றால், இந்திய முஸ்லிம்களைத் தங்களுடைய வார்த்தைகளாலும் செயல்களாலும் கொடியவர்களைப் போலச் சித்தரிக்கும் போக்குதான். இன்றைய இந்தியாவில் அரசியலில் முஸ்லிம்களுக்கு மிகவும் குறைவான பிரதிநிதித்துவமே கிடைக்கிறது. வேலை செய்யும் இடங்களிலும் சந்தைகளிலும் முஸ்லிம்கள் பாரபட்சமாக நடத்தப்படுகின்றனர். தொலைக்காட்சிகளிலும் சமூக ஊடகங்களிலும் முஸ்லிம்களை ஏளனம் செய்கின்றனர், அவமதிக்கின்றனர். அவர்களுக்கு இழைக்கப்படும் துயரங்களும் களங்கமும் நம் அனைவருக்குமேயான அவமானமாகும்.

கலாச்சாரத்திலிருந்து பொருளாதாரத்துக்குச் செல்கிறேன். பொருளாதாரத்தை மேலும் தாராளமயப்படுத்துவேன் என்று சொல்லித்தான் மோடி ஆட்சிக்கு வந்தார். ஆனால், 1991இல் கொண்டுவரப்பட்ட பொருளாதாரச் சீர்திருத்தங்கள் முடிவுக்கு வரும்வகையில், அரசின் கட்டுப்பாடுகளை அதிகப்படுத்தியிருக்கிறார். இந்த நடவடிக்கை உள்நாட்டிலேயேகூட அனைத்து சுதேசி நிறுவனங்களுக்கும் சமமான போட்டிக்கு வழி வகுத்துவிடவில்லை.

அதற்கு மாறாக, ஆளுங்கட்சிக்கு நெருக்கமான சில பெரும் தொழிலதிபர்களுக்கே சாதகமாக இருக்கிறது. உலகளவில் இகழப்படும் முதலாளித்துவத்தின் அடுத்த நிலை இது என்று அரசுக்கு முதன்மைப் பொருளாதார ஆலோசகராக இருந்தவரே அலுத்துக்கொள்ளும் அளவுக்கு நிலைமை இருக்கிறது. இதை '2ஏ மாடல்' என்று அவர் குத்தலாகக் குறிப்பிட்டுள்ளார். அரசு நிர்வாகத்தில் அதிகார வர்க்கம் மீண்டும் பலம் படைத்ததாக உருவெடுத்துள்ளது.

வருமான வரி, சுங்கத் துறை அதிகாரிகளிடமிருந்து ஒரு காலத்தில் பறிக்கப்பட்ட அதிகாரங்கள் இப்போது மீண்டும் தரப்பட்டுவிட்டன. இவ்வாறு புதுப்பிறவி கண்டுள்ள 'பர்மிட் - லைசென்ஸ் - கோட்டா ராஜ்' நிர்வாகத்தால் சிறு தொழிலதிபர்கள்தான் பாதிக்கப்பட்டுள்ளனர். இதற்கிடையே, வேலையில்லாத் திண்டாட்டம் உச்சத்தைத் தொட்டிருக்கிறது, இந்தியத் தொழிலாளர்களின் பணித் திறனோ பாதாளத்தில் இருக்கிறது.

**வரலாற்றாசிரியர்கள் எப்படி பார்ப்பார்கள்?**

உலகின் தலைசிறந்த பொருளாதார அறிஞர்கள் 2022ஆம் ஆண்டுக்கான 'உலக அசமத்துவ' அறிக்கையைத் தயாரித்துள்ளனர். இந்தியாவின் பெரும் பணக்காரர்கள் நாட்டு மக்கள்தொகையில் 1% என்றால், அவர்களிடம் இருக்கும் செல்வ மதிப்பு

தேசிய வருமானத்தில் 22% என்று சுட்டுகின்றனர். மிகவும் வறிய நிலையில் இருக்கும் 50% ஏழைகளுடைய மொத்த சொத்து மதிப்பைக் கூட்டினால் தேசிய வருமானத்தில் 13%தான் வருகிறது. இது வருவாயிலும் செல்வத்திலும் இந்திய சமூகத்தில் எவ்வளவு பெரிய ஏற்றத்தாழ்வு நிலவுகிறது என்பதைக் காட்டுகிறது.

2021 ஜூலையில், தொழிலதிபர் முகேஷ் அம்பானியின் செல்வ மதிப்பு 8,000 கோடி அமெரிக்க டொலர்கள். அதற்கும் முந்தைய ஆண்டைவிட 1,500 கோடி அமெரிக்க டொலர்கள் அதிகம். கௌதம் அதானியின் செல்வ மதிப்போ 1,300 கோடி அமெரிக்க டாலரிலிருந்து 55,000 கோடி அமெரிக்க டொலராக உயர்ந்திருக்கிறது. அதானியின் சொந்த சொத்து மட்டுமே 11,000 கோடி டொலருக்கும் மேல் உயர்ந்துவிட்டது. வரலாற்று ரீதியாகவே இந்தியாவில் மக்களிடையே வருமானத்திலும் செல்வ மதிப்பிலும் பெரும் ஏற்றத்தாழ்வுகள் நிலவுகின்றன. இப்போது தீவிரம் பெற்றுவிட்டன.

நரேந்திர மோடி முழுக்க முழுக்க தனது சொந்த முயற்சியால் இந்தப் பதவிக்கு வந்தவராக இருக்கலாம், இந்திரா காந்தியைப் பின்பற்றும் அவருடைய போக்கும், சர்வாதிகார உள்ளுணர்வுகளும், ஆர்.எஸ்.எஸ் பயிற்சியால் உலகை அவர் பார்க்கும் பார்வையும் வருங்கால வரலாற்றாசிரியர்களால் அவர் மிகக் கடுமையாகவே விமர்சிக்கப்படுவார், அவருடைய பக்தகோடிகள் வேண்டுமானால் எல்லையில்லாமல் அவரைத் துதித்துக் கொண்டிருக்கலாம்.

**நம் பணிகள் ஏராளம்…**

செல்வாக்கு மிக்க தலைவர்களின் வாக்குறுதிக்கும், செய்து முடிக்க அவர்களுக்கிருந்த ஆற்றலுக்கும் – உண்மையில் அவர்கள் செய்த செயலுக்கும் இடையிலான இடைவெளியை ஆராய்ந்தால், இந்தியா ஏன் இப்படி எல்லா குறியீடுகளிலும் தாழ்நிலையை அடைந்துள்ளது என்பதற்கு விளக்கம் கிடைக்கலாம். அல்லது சமூகரீதியாக இதற்கு விளக்கம் காணலாம். "ஜனநாயகம் என்பது இந்தியாவின் மேல்பூச்சுதான், அடியில் எல்லாமே அஜனநாயகம்தான்" என்றார் அம்பேத்கர்.

இந்தியக் கலாச்சாரத்திலும் வரலாற்றிலும் ஊறிவிட்ட சுதந்திரத்துக்கு எதிரான உணர்வுகளை மாற்றி, புரட்சிகரமாக திருப்பம் உண்டாக்கச் செய்வதற்கு எழுபத்தைந்து ஆண்டுகள் என்ற காலம் குறுகியதாகவும் போதாமலும் இருக்கலாம்!

எப்படியிருந்தாலும், நாட்டை முன்னேற்றப்போவதகாவும் முன்னேற்றிவிட்டதாகவும் மார்தட்டும் தலைவர்களின் வாய்ச் சவடால்களை இனியும் நம்பி நாம் ஏமாறக் கூடாது. இனி வரும் காலங்களில் இந்த மார்தட்டல் மேலும் தீவிரமடையும். மோடி பேசியதைப் போல உலகமே வாய் பிளந்து இந்தியாவை அற்புதமான நாடாக வியந்து பார்த்துக் கொண்டிருக்கவில்லை.

சுயமாக சிந்திக்கக்கூடிய, நடப்பவற்றைக் கண்கொண்டு பார்க்கத் தெரிந்த இந்தியர்களும் அப்படி வியப்பில் ஆழ்ந்துவிடவில்லை. இப்போதைக்கு இந்தியா சுதந்திர நாடாக இருக்கிறது, இந்தியர்களோ அரசியல்ரீதியாக, சமூகரீதியாக, பொருளாதாரரீதியாக, கலாச்சாரரீதியாக, நிறுவனரீதியாக சுதந்திரம் குறைந்தவர்களாகவே வாழ்கிறார்கள். நாம் ஆற்ற வேண்டிய பணிகள் ஏராளம்.

# வரலாற்று மாற்றம்

இலத்தீன்–அமெரிக்க நாடான கொலம்பியாவில் 70 ஆண்டுகால வலதுசாரி ஆட்சிக்கு முடிவு கட்டப்பட்டிருக்கிறது. முதன்முறையாக ஒரு இடதுசாரித் தலைவரை அந்நாட்டு மக்கள் ஜனாதிபதியாகத் தேர்வு செய்திருக்கிறார்கள். பொறுப்பேற்றவுடன், "இன்றைய திகதிக்கு கொலம்பியா மாறியுள்ளது. இந்த மாற்றம் என்பது பழிவாங்குவதற்கோ அல்லது மேலும் வெறுப்பை வளர்க்கவோ அல்ல" என்று பெட்ரோ உரையாற்றியுள்ளார். மற்றொரு வரலாற்றுத் திருப்பமாக, முதன்முறையாக ஒரு ஆப்பிரிக்க–கொலம்பியப் பெண், பிரான்சியா மார்குஸ், துணை ஜனாதிபதியாகத் தேர்வாகியுள்ளார்.

குஸ்தவோ பெட்ரோ 17 வயதிலேயே 1970களில் மோசடி மூலம் ஆட்சியைக் கைப்பற்றிய வலதுசாரிகளை எதிர்த்து ஆயுதந்தாங்கிய போராட்டங்களை நடத்திய கொரில்லாக்குழுவில் இடம் பெற்றிருந்தார். நாடாளுமன்ற ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை கொண்ட அவர், 2010 மற்றும் 2018 ஆகிய இரண்டு ஜனாதிபதித் தேர்தல்களிலும் போட்டியிட்டிருந்தார். இந்த தேர்தல்களில் அனைவருக்கும் மருத்துவ வசதி, பொதுத்துறையில் வங்கிகள், நிலச்சீர்திருத்தம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, போதைப் பொருட்கள் கடத்தல் ஒழிப்பு உள்ளிட்டவற்றை அவர் முன்னிறுத்தினார்.

கொலம்பியா சந்தித்து வரும் பிரச்சனைகளில் முக்கியமானது போதைப் பொருட்கள் கடத்தலும் ஒன்றாகும். இதுவரையில் இருந்த ஜனாதிபதிகள் அனைவருமே இந்தக் கடத்தல்களுக்கு எதிராகப் போர் தொடுப்பதாகச் சொல்லி வந்தனர். முதன்முறையாக கொலம்பியாவின் ஜனாதிபதி ஒருவர், அத்தகைய போர் தோல்வியுற்றது என்று கூறியுள்ளார். அவ்வாறு சொன்ன குஸ்தவோ பெட்ரோ, அதோடு நிற்கவில்லை. கடத்தப்படும் போதைப் பொருட்களை வாங்கி நுகர்வதை வளர்ந்த நாடுகள் நிறுத்தி விட்டாலே போர் தொடுக்க வேண்டிய அவசியம் ஏற்படாது என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

கொலம்பியாவின் 5 கோடி மக்களில் 40 விழுக்காட்டினர் வறுமையில் வாடிக் கொண்டிருக்கிறார்கள். முந்தைய வலதுசாரி ஆட்சியாளர்களின் கொள்கைகள் நிலைமையை மோசமாக்கிச் சென்றிருக்கின்றன. அதிகாரப்பூர்வ புள்ளிவிபரங்களின்படியே, வேலையின்மை 11.7 விழுக்காடாக உள்ளது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் பணவீக்கம் 10.2 விழுக்காடு அதிகரித்திருக்கிறது. அனைத்து வகைகளிலும் கொலம்பிய மக்கள் மிகவும் மோசமான சூழலில் வாழ்கிறார்கள். முதன்முறையாக ஏழை, நடுத்தர மக்கள் நலன்களில் அக்கறை செலுத்தும் அரசுக்கு மக்கள் வாக்களித்துள்ளனர்.

கொலம்பியாவின் 4 ஆயிரம் பணக்காரர்கள் மீது வரி விதிக்கப்படும் என்ற அறிவிப்பு கொலம்பிய அரசியலில் வரலாற்று மாற்றமாகப் பார்க்கப்படுகிறது. யாரால் வரி செலுத்த முடியுமோ அவர்கள் மீது வரியைப் போடுவது, அதன் மூலம் வரும் வருமானத்தை கல்வி மற்றும் சுகாதாரத் துறைகளில் முதலீடு செய்வது என்ற குஸ்தவோ பெட்ரோவின் அறிவிப்பு நடைமுறைக்கு வந்தால் உண்மையான மாற்றமாகவே இருக்கும்.

வரலாற்றை திரும்பிப் பார்த்தல்:

# 1970 ஆண்டு ஐக்கிய முன்னணி அரசாங்கம்



சுதந்திரத்துக்கு பிந்தைய இலங்கையின் வரலாற்றில் 1970ஆம் ஆண்டு ஒரு முக்கியமான ஆண்டாகும். அதற்குக் காரணம் அந்த ஆண்டு மே மாதம் 27ஆம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலில் திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான 'ஐக்கிய முன்னணி' (United Front) மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சியைக் கைப்பற்றியது. இந்த ஐக்கிய முன்னணியில் சிறீமாவோவின் சொந்தக் கட்சியான, அவரது கணவரான எஸ்.டபிள்யு.ஆர். பண்டாரநாயக்க 1951இல் ஆரம்பித்த சிறீலங்கா சுதந்திரக் கட்சியுடன், இலங்கையின் பழமை வாய்ந்த இடதுசாரிக் கட்சிகளான லங்கா சமசமாஜக் கட்சியும், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும் அங்கம் வகித்தன.

1970இல் ஐக்கிய முன்னணி அதிகாரத்தைக் கைப்பற்றி 2020 மே மாதத்துடன் 50 வருடங்கள் பூர்த்தியாகிவிட்டன. பிரித்தானிய முதலாளித்துவ 'வெஸ்ற்மின்ஸ்ரர்' (Westminster) பாராளுமன்ற ஜனநாயத்தைப் பின்பற்றும் இலங்கையில் 30 வருட போர் நடைபெற்ற காலத்தில் கூட பெரும்பாலும் 5 வருடத்துக்கு ஒருமுறை தவறாது தேர்தல் நடத்தப்பட்டு வந்துள்ளது. அது இலங்கை ஜனநாயகத்தின் சிறப்பம்சம். இருப்பினும் இந்த 1970ஆம் ஆண்டுத் தேர்தலுக்கு மேலும் ஒரு சிறப்பு அம்சம் இருக்கின்றது.

அது என்னவென்றால், இலங்கையில் முதன்முதலாக இரண்டு கட்சி ஆட்சி முறையை நிலைநிறுத்திய, முதன்முதலாக பண்டாரநாயக்க ஆட்சியைக் கைப்பற்றிய 1956 பொதுத் தேர்தலின் போது, பண்டாரநாயக்கவின் சுதந்திரக் கட்சி பிலிப் குணவர்த்தன தலைமையிலான மகாஜன எக்சத் பெரமுனவுடன் (மக்கள் ஐக்கிய முன்னணி) இணைந்தே ஆட்சியைக் கைப்பற்றியது. மற்றைய இடதுசாரிக் கட்சிகள் இரண்டும் பண்டாரநாயக்க அரசாங்கத்தின் ஏகாதிபத்திய விரோத, மக்கள் நலத் திட்டங்களுக்கு வெளியில் இருந்து ஆதரவளித்தனவே தவிர அரசில் சேரவில்லை.

1957இல் பண்டாரநாயக்க பிற்போக்கு சக்திகளால் படுகொலை செய்யப்பட்ட பின்னர் அவரது மனைவி சிறீமாவோ கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றார். அவர் தலைமையில் 1960 பொதுத் தேர்தலில் கட்சி போட்டியிட்டது. அந்த ஆண்டு இருதடவைகள் தேர்தல் நடந்தது. மார்ச் 19ந் திகதி நடந்த தேர்தலில் எக்கட்சியாலும் ஆட்சியமைக்க முடியவில்லை. ஜுலை 20ந் திகதி நடந்த தேர்தலில் சிறி.சு,கட்சி 75 ஆசனங்களுடன் தேர்தலில் வெற்றி பெற்றாலும், ஆட்சியமைப்பதற்கு ஓர் ஆசனம் போதாமலிருந்தது. எனினும் அதிக ஆசனங்களை வென்ற கட்சியென்ற அடிப்படையில், சிறீமாவோ உலகின் முதல் பெண் பிரதமராக பெருமையுடன் பதவியேற்றார். பிரதமர் பதவி பொறுப்பெற்றிருந்தாலும் அவர் அனுபவம் குறைந்தவராகவே இருந்தார். அத்துடன் கட்சிக்குள்ளும் அமைச்சரவையிலும் சி.பி.டி.சில்வா போன்றவர்களின் தலைமையில் வலதுசாரி அணியொன்று பலமாகவும் இருந்தது. அந்த அணி சிறீமாவோ தனது கணவர் பண்டாரநாயக்கவின் ஏகாதிபத்திய விரோதக் கொள்கையைத் தொடர்வதற்கும் இடையூறாக இருந்தது.

மறுபக்கத்தில், இடதுசாரிக் கட்சிகளான லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, மகாஜன எக்சத் பெரமுன என்பன இணைந்து 'இடதுசாரி முன்னணி' என்ற பெயரில், மொத்தம் 19 ஆசனங்களுடன் மிகப்பெரிய ஐக்கிய முன்னணி ஒன்றையும் உருவாக்கியிருந்தன. இந்த முன்னணி இலங்கையில் இருக்கின்ற அனைத்து தொழிலாளி வர்க்கம் சார்பாக 21 கோரிக்கைகளை முன் வைத்து மாபெரும் போராட்டம் ஒன்றுக்கு தயாராகி வந்தது. அந்தப் போராட்டம் நிகழ்ந்தால் அது 1953இல் நடைபெற்ற, நாட்டையே ஸ்தம்பிக்க வைத்த, புகழ்பெற்ற ஹர்த்தால் போராட்டத்தை ஒத்ததாக இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

**கே. மாணிக்கவாசகர்**

இந்த நிலைமையில் சிறிமாவோ இருபக்க நெருக்கடியை எதிர்நோக்கினார். ஒரு பக்கம் கட்சிக்குள் இருக்கும் வலதுசாரிகள் கொடுக்கும் நெருக்கடி. மறுபக்கம் வெளியிலிருந்து இடதுசாரிகள் கொடுக்கும் நெருக்கடி. இதில் இடதுசாரிகள் கொடுக்கும் நெருக்கடியே உடனடி ஆபத்தாக இருந்ததால், முதலில் அதற்குத் தீர்வு காண்பதற்கு முயன்றார்.

அதன் பொருட்டு சிறீமாவோ மிகச் சாதுரியமாகச் செயற்பட்டு 1964 ஆம் ஆண்டில் லங்கா சமசமாஜக் கட்சியை

முன்னணியிலிருந்து பிரித்தெடுத்து அந்தக் கட்சியின் தலைவரும், பொருளாதாரத்தில் இரட்டைக் கலாநிதி பெற்றவருமான டாக்டர் என்.எம்.பெரேராவுக்கு தனது அரசில் மிக முக்கியமான நிதியமைச்சு பொறுப்பை வழங்கினார். அதன் பின்னர் சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடதுசாரிக் கட்சிகளுக்கும் இடையிலான உறவு படிப்படியாக அதிகரித்து வந்தது. அதன் தொடர்ச்சியே 1970 தேர்தலின் போது மூன்று கட்சிகளும் கூட்டணி அமைத்துப் போட்டியிடவும், தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் வெற்றி பெறவும் வழிவகுத்தது.

1970இல் அமைந்த ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் முதல் முறையாக இரண்டு இடதுசாரிக் கட்சிகளும் (லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி) அங்கம் வகித்ததால் அந்த அரசாங்கம் பல முற்போக்கு நடவடிக்கைகளை எடுக்க ஆரம்பித்தது. அந்த நடவடிக்கைகள் அந்நிய ஏகாதிபத்திய சக்திகளுக்கும் அவற்றின் உள்ளூர் பிரதிநிதிகளான ஐக்கிய தேசியக் கட்சிக்கும், தமிழ் பிற்போக்கு கட்சிகளுக்கும் உவப்பானதாக இருக்கவில்லை. எனவே அவை பல எதிர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், சீர்குலைவு வேலைகளை மேற்கொள்வதற்கும் தருணம் பார்த்துக் காத்திருந்தன.

ஆனால் அரசுக்கு எதிரான முதல் நடவடிக்கை ஆயுதக் கிளர்ச்சி என்ற வடிவத்தில் இடதுசாரிப் போர்வையில் இருந்த ஜே.வி.பியிடம் இருந்து உருவானது. மக்கள் வழங்கிய மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் உருவான அரசாங்கத்தை அதன் ஒரு வருடம் பூர்த்தியாவதற்கு முன்பே கவிழ்ப்பதற்கு 1971 ஏப்ரல் 5ஆம் திகதி ஜே.வி.பி. ஆயுதக் கிளர்ச்சி ஒன்றை ஆரம்பித்தது. ஆனால் அந்தக் கிளர்ச்சிக்கு மக்களின் ஆதரவு இல்லாமையினால் முளையிலேயே கிள்ளி எறியப்பட்டது. கிளர்ச்சியை முறியடிப்பதற்கு இலங்கையின் நெருங்கிய நட்பு நாடுகளான இந்தியா, சோவியத் யூனியன், சீனா என்பன பல வழிகளிலும் ஒத்தாசை வழங்கின. ஜே.வி.பி. கிளர்ச்சியின் பின்னணியில் அந்நிய ஏகாதிபத்திய சக்திகளும், ஐ.தே.கவும் இருந்தது பின்னர் நிரூபணமானது.

இந்த அரசாங்கத்திலும் சமசமாஜக் கட்சித் தலைவர் டாக்டர் என்.எம்.பெரேராதான் நிதியமைச்சராக இருந்தார். அவர் பெரும் தனவந்தர்களிடம் இருந்த கறுப்புப் பணத்தை வெளிக் கொணர்வதற்காக 100 மற்றும் 50 ரூபா நாணயத் தாள்களை திடீரென செல்லுபடியற்றதாக்கி ஒரு 'புரட்சி' செய்தார். ஆனால் அவர் எதிர்பார்த்தளவு கறுப்புப் பணம் வெளிவரவில்லை. காரணம் என்னவென்றால் பணம் பதுக்கி வைத்திருந்தவர்கள் முன்னரே இதை அறிந்து கொண்டு அவற்றை வங்கியில் வேறு பெயர்களில் வைப்புச் செய்தும், அந்தத் தாள்களை 10 மற்றும் 5 ரூபா தாள்களாக மாற்றியும் அதிலிருந்து தப்பிவிட்டனர். கிளிநொச்சியில் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக இருந்த முன்னாள் தமிழரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரே தன்னிடமிருந்த ஒருதொகை பணத்தை தனது சங்கத்தில் கொடுத்து மாற்றிச் சென்றார் என்றால், தென்னிலங்கையில் நிலவரம் எப்படி இருந்திருக்கும் என எண்ணிப் பார்க்கலாம். இந்தத் திட்டத்தால் பாதிக்கப்பட்டவர்கள் சிறிய தொகை 100 மற்றும் 50 ரூபா தாள்களை வைத்திருந்த மத்தியதர வர்க்கத்தினர்தான்.

ஐக்கிய முன்னணி அரசாங்கம் செய்த மிகப்பெரும் சாதனைகளில் தலையாயது 1972இல் புதிய குடியரசு அரசியல் சாசனம் ஒன்றைக் கொண்டு வந்ததாகும். அதுவரை காலமும் பிரிட்டிஸ் ஆட்சிக்காலத்தில் அவர்கள் நியமித்த சோல்பரி பிரபு என்பவர் வரைந்த அரசியல் சாசனம்தான் நடைமுறையில் இருந்து வந்தது. ஒரு ஏகாதிபத்திய நாடு தனது காலனி நாடு ஒன்றுக்கு வரையும் அரசியல் சாசனம் எப்படியிருக்கும் என்பதைச் சொல்லத் தேவையில்லை. அந்த அடிமைச் சாசனத்தை மாற்றியமைக்க ஐக்கிய முன்னணி அரசாங்கம் முடிவு செய்தது.

அதன்படி அதுவரை காலமும் பிரித்தானிய முடியாட்சியின் கீழ் ஒரு நாடாக இருந்து வந்த இலங்கை அதிலிருந்து தன்னைத் துண்டித்துக் கொண்டு தன்னை ஒரு குடியரசு நாடாகப் பிரகடனம் செய்து கொண்டது. இலங்கையின் பெயர் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு என மாற்றப்பட்டது. ஆங்கிலத்தில் இலங்கைக்கு சிலோன் (Ceylon) என பிரித்தானியர் வைத்த பெயர் சிறீலங்கா என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

இலங்கையை குடியரசாக்கியது பிரித்தானியர்களுக்குப் பிடிக்கவில்லை. எனவே அவர்கள் அதற்கு எதிராக தமது செல்லப் பிள்ளைகளான பிற்போக்கு தமிழ் இனவாதிகளைத் தூண்டிவிட்டனர். அதன் அடிப்படையில் தமிழரசுக் கட்சி சட்டத்தை மீறி குடியரசு எதிர்ப்புப் போராட்டங்களை தமிழ் பிரதேசம் எங்கும் தொடங்கி நடத்தியது. தமது போராட்டத்துக்கு நியாயம் கற்பிப்பதற்காக அவர்கள் சொன்ன காரணம், முன்னைய சோல்பரி அரசியல் சாசனத்தில் சிறுபான்மை இனங்களுக்கு பாதுகாப்பளிப்பதற்காக சேர்க்கப்பட்டிருந்த 28ஆவது சரத்து புதிய குடியரசு அரசியல் சாசனத்தில் நீக்கப்பட்டுவிட்டதுடன், புதிய சாசனத்தில் பௌத்த மதத்துக்கு முதன்மை இடம் வழங்கப்பட்டுவிட்டது என்பதுமாகும். உண்மையில் இது போராட்டத்துக்குப் பதிலாகப் பேசித் தீர்த்திருக்க வேண்டிய பிரச்சினை.

இந்தப் பிரச்சினையுடன் இன்னொரு பிரச்சினையும் தமிழ் இனவாதிகளுக்குத் தீனி போட்டது. அதாவது, அரசாங்கம் பல்கலைக்கழக அனுமதியில் தரப்படுத்தல் முறையொன்றை அறிமுகப்படுத்தியது. இந்த முறை இன அடிப்படையிலானது என ஆட்சேபம் தெரிவித்து தமிழரசுக் கட்சி தமிழ் மாணவர்களை தூண்டிவிட்டு அரச எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தியது. ஆனால் அரசாங்கம் இதில் உள்ள தவறுகளை அமைச்சர் பீட்டர் கெனமன் தலைமையிலான குழு ஒன்றின் மூலம் ஆராய்ந்து களைந்துவிட்டது. இந்த தரப்படுத்தல் முறையைக் கொண்டு வந்தபோது கல்வி அமைச்சராக இருந்தவர் தமிழ் இனத்தை விட சிறுபான்மை இனமான முஸ்லீம் இனத்தைச் சேர்ந்த பதியுதீன் மஹ்மத் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனாலும் தமிழரசுக் கட்சி தனது அந்தரங்க நோக்கத்துக்கான போராட்டத்தை கைவிடவில்லை. தமிழ் மாணவர் பேரவை, தமிழ் இளைஞர் பேரவை போன்ற அமைப்புகளை உருவாக்கி தமிழ் இனவாதத் தீயை பட்டிதொட்டி எங்கும் விசிறிப் பரப்பியது. தரப்படுத்தல் முறையை எதிர்ப்பதற்காக அதைக் கொண்டு வந்த கல்வியமைச்சர் பதியுதீனை எதிர்பதாகச் சொல்லிக்கொண்ட அவரை இனவாத அடிப்படையில் "முக்கால் மந்திரி மஹ்முத் ஒழிக" என்ற கோசம் எழுப்பப்பட்டது. குடியரசு எதிர்ப்பு, தரப்படுத்தல் எதிர்ப்பு என்ற இரட்டைக் குழல் துப்பாக்கி மூலம்தான் தமிழீழப்

போராட்டத்துக்கு கால்கோள் இடப்பட்டது.

பிற்போக்கு சக்திகள் ஐக்கிய முன்னணி அரசைக் கவிழ்ப்பதற்கு சிங்கள இனத்திலிருந்து இடதுசாரிப் போர்வையில் தேர்ந்தெடுத்த ஜே.வி.பியின் போராட்டம் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டாலும், தமிழ் இனத்திலிருந்து வலதுசாரி சக்திகள் மூலம் உருவாக்கப்பட்ட இனவாதப் போராட்டத்தை கட்டுப்படுத்த முடியாமல் போய்விட்டது. அது 30 வருட உள்நாட்டுப் போராக உருமாறி பலத்த அழிவுகளுக்குப் பின்னர் 2009இல்தான் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

ஐக்கிய முன்னணி அரசாங்கம் செய்த இன்னொரு முக்கியமான சாதனை மலைநாட்டிலிருந்த வெளிநாட்டு – உள்நாட்டு தனியார் கம்பனிகளுக்குச் சொந்தமான 502 தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்களைத் தேசியமயமாக்கியதும், காணி சீர்திருத்தத்தின் மூலம் காணி உச்ச வரம்பை 50 ஏக்கர் ஆக்கியதுமாகும். அந்தக் காலகட்டத்தில் இலங்கையின் மொத்த தேசிய உற்பத்தியில் 30 சதவீதம் தேயிலை, இறப்பர், தெங்குப் பொருட்கள் மூலம் கிடைத்து வந்தது. இலங்கை ஈட்டிய அந்நிய செலாவணியில் அதன் பங்கு 90 வீதமாகும்.

தேசியமயம் என்பது இலங்கைக்கோ ஏனைய புதிதாகச் சுதந்திரம் அடைந்த நாடுகளுக்கோ புதிய விடயம் அல்ல. இலங்கையைப் பொறுத்தவரை 1956இல் பண்டாரநாயக்க ஆட்சிக்கு வந்தது முதல் அந்நியருக்குச் சொந்தமான நிறுவனங்கள் தேசியமயமாக்கப்பட்டு வந்துள்ளன. அது அவரது மனைவி சிறீமாவோவின் 1960 – 64 ஆண்டுப் பதவிக் காலத்திலும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டது. இந்தக் காலகட்டத்தில் அந்நியர் ஆதிக்கத்தில் இருந்த வங்கிகள், காப்புறுதி நிறுவனங்கள், துறைமுகம், ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம், பெற்றோலியம், தனியார் பாடசாலைகள், பஸ் கொம்பனிகள் உட்பட பல நிறுவனங்கள் தேசியமயமாக்கப்பட்டன. அந்த அடிச்சுவட்டைப் பின்பற்றியே பெருந்தோட்டங்களும் தேசியமயமாக்கப்பட்டன. (1977இல் ஆட்சிக்கு வந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான ஐ.தே.க. அரசாங்கம் தேசியமயமாக்கப்பட்ட பெருந்தோட்டங்களை மீண்டும் தனியார்துறைக்கு தாரை வார்த்தது)

**Parliament Election (1970)**

| Party | Candidates | | | Total Votes Polled | Percentage Polled |
|---|---|---|---|---|---|
| | Contested | Elected | Defeated | | |
| Sri Lanka Freedom Party | 108 | 91 | 17 | 1,839,979 | 36.9 |
| Lanka Sama Samaja Party | 23 | 19 | 4 | 433,224 | 8.7 |
| United National Party | 130 | 17 | 113 | 1,892,525 | 37.9 |
| Federal Party | 19 | 13 | 6 | 245,727 | 4.9 |
| Communist Party (Moscow) | 9 | 6 | 3 | 169,199 | 3.4 |
| Tamil Congress | 12 | 3 | 9 | 115,567 | 2.3 |
| Mahajana Eksath Peramuna | 4 | 0 | 4 | 46,571 | 0.9 |
| Independents | 136 | 2 | 134 | 249,006 | 5.0 |
| Total | 441 | 151 | 290 | 4,991,798 | 100.0 |

ஐக்கிய முன்னணி ஆட்சிக் காலத்தில் இந்தியாவுடன் இருந்த, வரலாறு விட்டுச் சென்ற இரண்டு பிரச்சினைகளுக்கு வெற்றிகரமாத் தீர்வு காணப்பட்டது. அதில் ஒன்று இலங்கையிலுள்ள மலையகத் தோட்டத் தொழிலாளர்களான இந்திய வம்சாவழி மக்களின் பிரச்சினை. (இவர்களது பிரஜாவுரிமையையும் வாக்குரிமையையும் 1948இல் சுதந்திர இலங்கையின் முதலாவது அரசாங்கத்தை அமைத்த டி.எஸ்.சேனநாயக்க தலைமையிலான ஐ.தே.க. அரசாங்கம் பறித்து அந்த மக்களை நாடற்றவர்களாக்கியிருந்தது)

ஏற்கெனவே இந்தப் பிரச்சினை சம்பந்தமாக 1964 ஒக்ரோபர் 30இல் இலங்கைப் பிரதமர் சிறீமாவோ பண்டாரநாயக்கவுக்கும், அப்போதைய இந்தியப் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரிக்கும் இடையில் செய்யப்பட்ட ஒரு ஒப்பந்தத்தின் மூலம் இந்தியா ஒரு குறிப்பிட்ட தொகை இந்திய வம்சாவழி மக்களை ஏற்றுக் கொண்டிருந்தது. அதன் தொடர்ச்சியாக மிகுதியாக இருந்த மக்கள் சம்பந்தமாக 1974 யூன் 28இல் இலங்கைப் பிரதமர் சிறீமாவோவுக்கும், அப்போதைய இந்தியப் பிரதமர் இந்திராகாந்திக்கும் இடையில் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்தாகி நாடற்றவர் பிரச்சினைக்கு இறுதித் தீர்வு காணப்பட்டது.

அது தவிர, இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் அமைந்திருந்த மனிதர்கள் வசிக்காத, அதேநேரத்தில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த கச்சதீவு விவகாரத்துக்கும் சிறீமாவோ – இந்திரா பேச்சுவார்த்தையின் மூலம் 1974இல் இறுதித் தீர்வு காணப்பட்டது. இரு நாடுகளும் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் மூலம் கச்சதீவு மீதான இலங்கையின் ஆதிபத்தியம் (உரிமை) உறுதி செய்யப்பட்டது. இந்த இரு ஒப்பந்தங்களையும் வெற்றிகரமாக நிறைவேற்றுவதில் இந்தியத் தலைமையுடன் சிறீமாவோ பண்டாரநாயக்க கொண்டிருந்த ஆழமான நட்புணர்வும், அவரது இராஜதந்திரமும் முக்கிய பங்கு வகித்தன என்றால் அது மிகையாகாது. அதேநேரத்தில் அமெரிக்கா சார்பாகவும், தமிழர் விரோதமாகவும் இருந்த ஜே.ஆர்ஜெயவர்த்தனவுக்கும் அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் இடையில் 1987இல் செய்து கொள்ளப்பட்ட இந்திய – இலங்கை ஒப்பந்தம் சிறீமாவோ இந்தியத் தலைவர்களுடன் செய்த ஒப்பந்தங்களிலிருந்து தன்மையில் மாறுபட்டது என்பதை இங்கு அவதானிக்க வேண்டும்.

ஐக்கிய முன்னணி அரசாங்கம் தனது பதவிக் காலத்தில் செய்த இன்னொரு முக்கியமான சாதனை பத்திரிகை ஏகபோகத்தை தகர்த்ததாகும். இலங்கையில் ஐ.தே.க. குடும்பத்தைச் சேர்ந்த டி.ஆர்.விஜேயவர்த்தனவினால் ஆரம்பிக்கப்பட்ட 'லேக்ஹவுஸ்' (ஏரிக்கரை) நிறுவனம் மும்மொழிகளிலும் தினசரி, வார இறுதி, வாராந்த, மாதாந்த அடிப்படையில் சுமார் 16 பத்திரிகைகளை நடத்தி வருகின்றது. இந்த நிறுவனம் கடந்த காலங்களில் அரசியலில் ஐ.தே.கவுக்கு ஆதரவாக பல அரசியல் பிரச்சாரங்களைச் செய்து வந்துள்ளது. அவை தேசத்துரோகமானவையாகவும், மக்கள் விரோதமானவையாகவும் இருந்தன. எனவே இந்த நிறுவனத்தை அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட காலமாக இருந்து வந்தது. குறிப்பாக இடதுசாரிக் கட்சிகள் இந்தக் கோரிக்கையை விடுத்து வந்தன.

1960இல் பதவிக்கு வந்த சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான அரசாங்கம் லேக்ஹவுஸ் நிறுவனத்தை அரசாங்கம் பொறுப்பேற்பதற்கான மசோதா ஒன்றை 1964இல்

நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்தது. ஆனால் லேக்ஹவுஸ் நிறுவனம் சில ஆளும் கட்சி உறுப்பினர்களை விலைக்கு வாங்கியதின் மூலம் அந்த மசோதா ஒரு மேலதிக வாக்கால் தோற்கடிக்கப்பட்டுவிட்டது. இதனால் சிறீமாவோ பண்டாரநாயக்க அரசாங்கம் பதவி விலகி புதிய தேர்தல் ஒன்றுக்கு வழிவிட வேண்டியதாயிற்று. அந்த தோல்வி அடைந்த முயற்சி ஐக்கிய முன்னணி அரசாங்கம் 1973 நொவம்பர் 28ஆம் திகதி கொண்டு வந்து நிறைவேற்றப்பட்ட சட்டம் ஒன்றின் மூலம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது.

ஐக்கிய முன்னணி ஆட்சிக் காலத்தில் இலங்கைக்கு சர்வதேச அரங்கில் புகழ் ஈட்டித்தந்த இரண்டு நிகழ்வுகள் நடைபெற்றன. ஒன்று 1976ஆம் ஆண்டு ஓகஸ்ட் 16 முதல் 19 வரை கொழும்பில் நடைபெற்ற அணிசேரா இயக்கத்தின் 5ஆவது உச்சி மாநாடாகும். 1961இல் யூகோஸ்சிலோவாக்கியாவின் தலைநகர் பெல்கிரேட்டில் உருவாக்கப்பட்ட அணிசேரா இயக்கத்தின் ஸ்தாபக நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். அந்தக் கூட்டத்திலும் அப்போது இலங்கையின் பிரதமராக இருந்த சிறீமாவோ கலந்து கொண்டார். இலங்கையின் அந்தப் பங்களிப்பு காரணமாக 5ஆவது மாநாட்டை நடாத்தும் வாய்ப்பும் பெருமையும் இலங்கைக்குக் கிடைத்தது.

ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் இன்னொரு சர்வதேச சாதனை இந்து சமுத்திரம் சமாதானப் பிராந்தியமாக இருக்க வேண்டும் என்ற ஒரு தீர்மானத்தை ஐ.நாவில் கொண்டு வந்து 1973 டிசம்பர் 06இல் பெரும்பான்மையான நாடுகளின் ஆதரவுடன் நிறைவேற்றியதாகும். அதற்குக் காரணம், அந்தக் கட்டத்தில் வியட்நாமில் ஆக்கிரமிப்பு யுத்தத்தில் ஈடுபட்டிருந்த அமெரிக்கா, டியாகோகார்சியாவில் இருந்த தனது இராணுவத் தளம் மூலம் இந்து சமுத்திரப் பிராந்தியத்திலும் தனது ஆதிக்கத்தை விஸ்தரிக்க முயன்று வந்தது. மறுபக்கத்தில், இந்திராகாந்தியின் இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்திருந்த சோவியத் யூனியன் இந்தியாவுடன் சேர்ந்து 'ஆசிய கூட்டு பந்தோபஸ்து' என்ற போர்வையில் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் காலூன்ற முயன்று வந்தது.

இந்த இரண்டு மேல்நிலை வல்லரசுகளின் ஆதிக்கத்தை முறியடித்து அணிசேராக் கொள்கையை நிலைநாட்டவே இலங்கை இந்து சமுத்திரம் சமாதானப் பிராந்தியமாக இருக்க வேண்டும் என்ற தீர்மானத்தை ஐ.நாவில் முன்மொழிந்தது. இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தின் போது இலங்கையின் பிரதமராக இருந்த சிறீமாவோ நேரடியாகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையிலும் கூட, ஐக்கிய முன்னணி ஆட்சிக் காலம் முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனெனில் இந்தக் காலத்தில்தான், அதாவது 1974 ஓகஸ்ட் 01ஆம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் முதன்முதலாக பிரதமர் சிறீமாவோ பண்டாரநாயக்கவால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இந்தப் பல்கலைக்கழக உருவாக்கத்தில் பாரம்பரிய தமிழ்க் கட்சிகள் எவ்வித பங்களிப்பும் வழங்கவில்லை. இன்னும் சொல்லப்போனால் தமிழர்களின் வாழ்வில் பெரும் நிகழ்வாக அமைந்த இந்தப் பல்கலைக்கழக திறப்பு விழாவுக்கு வருகை தந்த பிரதமர் சிறீமாவோக்கு எதிராக தமிழரசுக் கட்சி வட மாகாணத்தில் இரு நாட்கள் துக்க தினம் அனுட்டித்து ஹர்த்தால் நடத்தியது.

அதற்கு காரணம், 'தமிழ் மக்களுக்கு தமிழ் பல்கலைக்கழகம் வேண்டும்' என்றும், 'இல்லை, இல்லை தமிழ் மக்களுக்கு இந்துப் பல்கலைக் கழகம் வேண்டும்' என்றும் தமிழரசுக் கட்சியும் தமிழ் காங்கிரஸ் கட்சியும் அரசியல் நோக்கத்துடன் கயிறு இழுவையில் ஈடுபட்டதால், அவர்களால் தமிழ் பகுதியில் ஒரு பல்கலைக்கழகத்தைக் கொண்டுவர முடியாமல் போய்விட்டது. உண்மையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைக் கொண்டு வருவதில் முன்னின்று உழைத்தவர்கள் இடதுசாரிகளும், ஐக்கிய முன்னணி அரசில் அங்கம் வகித்த முற்போக்கு சக்திகளுமேயாவர்.

அதேநேரத்தில் இந்தக் காலகட்டத்தில் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் தேசிய ஒருமைப்பாடு மாநாடொன்றை கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடத்தியது. இந்த மாநாட்டில் இலங்கை முழுவதுமிருந்து எழுத்தாளர்களும் கலைஞர்களும் பெருமளவில் கலந்து கொண்டனர். இந்த மாநாட்டில் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்ட பிரதமர் சிறீமாவோ பண்டாரநாயக்க, எழுத்தாளர் சங்கம் தேசிய இனப் பிரச்சினை தீர்வு சம்பந்தமாகவும், நாட்டில் தேசிய ஒருமைப்பாட்டை உருவாக்குவது சம்பந்தமாகவும் தயாரித்த 12 அம்சங்கள் அடங்கிய மகஜரைப் பெற்றுக்கொண்டு அதற்குச் சாதகமாக உரையாற்றினார்.

ஐக்கிய முன்னணி அரசாங்கம் பொதுவாக நாட்டின் நலன் கருதி பல நடவடிக்கைகளை மேற்கொண்டாலும், சில பாதகமான செயல்பாடுகள் அரசாங்கத்தின் முன்னேற்றத்துக்கு இடையூறாக அமைந்தன. அதில் முக்கியமானது 1973இல் ஏற்பட்ட உலகளாவிய எண்ணெய் நெருக்கடியாகும். இந்த நெருக்கடியால் இலங்கையில் பொருளாதார நெருக்கடியும் உணவுத் தட்டுப்பாடும் ஏற்பட்டன. அந்த இக்கட்டான நேரத்தில் அரசியல் விரோதம் காரணமாக மேற்கு நாடுகள் இலங்கைக்கு உதவ மறுத்தன. சீனா மட்டும் தன்னாலான உதவியைச் செய்தது.

இந்தக் காலகட்டத்தில் அரசாங்கம் சில கட்டுப்பாடுகளையும் சிக்கன நடவடிக்கைகளையும் அமுல்படுத்தியது. அதனால் அரிசிக்கு தட்டுப்பாடு நிலவியதுடன் விலையும் பல மடங்கு அதிகரித்தது. பாண் வாங்குவதற்காக மக்கள் அதிகாலையிலேயே பேக்கரி வாசல்களில் காத்துக் கிடந்தனர். தேநீர்க் கடைகளில் மக்கள் சீனி போடாத 'காட்ட' என்ற வெறும் தேநீரை அருந்தும் நிலை உருவானது. அதனால் சாதாரண மக்கள் அரசின் மீது அதிருப்தி அடைந்தனர். இந்த நிலையை எதிர்க்கட்சியான ஐ.தே.க. தனக்குச் சாதகமாக நன்கு பயன்படுத்திக் கொண்டது.

இன்னொரு பக்கத்தில் தமிழ் பிற்போக்கு சக்திகள் அனைத்தும் ஓரணியாகத் திரண்டு தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி என்ற அமைப்பை உருவாக்கி 1976இல் வட்டுக்கோட்டையில் ஒரு மாநாட்டைக் கூட்டி தமிழீழ அரசு அமைக்கப் போவதாகப் பிரகடனம் செய்தனர். 1977 தேர்தலை மனதில் வைத்து போலியாக இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டாலும், அது தமிழ் மக்களைத் தேசிய வாழ்விலிருந்து மேலும் தனிமைப்படுத்தியது.

பொருளாதார நெருக்கடி, அரசியல் நெருக்கடி என்பன வளர்ந்து வந்த நிலையில் அரசாங்கத்திற்குள் பீலிக்ஸ்

**தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...**

# ஹிட்லரின் பாசிசமும் ஆர்.எஸ்.எஸ் பாசிசமும்



பாசிச இந்துத்துவாவின் மிக வேகமான வளர்ச்சியை தடுத்து நிறுத்துவது என்பது தான் இன்றைய இந்திய ஜனநாயகத்தை பாதுகாக்கும் போரில் முதன்மையான கடமை. நவீன தாராளமயக் கொள்கையை விட அதிக நச்சுத்தன்மை மிக்கது, இன்றைய இந்தியாவில் பல்கிப் பெருகும் பார்த்தீனிய விஷச்செடி போன்ற பாசிச சிந்தனை. இந்தியாவில் பாசிசத்தை தடுத்து நிறுத்துவதற்கு, அதன் இந்தியக் கூறுகளைப் பற்றி நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

**வேற்றுமைகள் என்ன?**

1930 களில் ஜெர்மனியை ஆட்சி செய்த கொடுங்கோலன் ஹிட்லரின் பாசிசக் கூறுகளுக்கும் அல்லது ஜப்பானிய பாசிசக் கூறுகளுக்கும், இன்றைய ஆர்எஸ்எஸ் - பாஜக ஆட்சியின் பாசிசக் கூறுகளுக்கும் நிறைய வேற்றுமைகள் இருக்கின்றன. 1930 களில் ஒரு தேசத்திற்கு நிதி வருமானம் அல்லது நிதி திரட்டல் என்பது பல்வேறு நாடுகளுக்கு ஆயுதங்கள் மற்றும் இராணுவத் தளவாடங்களை விற்பதன் மூலமாகத்தான் பெருமளவில் நடந்து கொண்டிருந்தது. அதனால் தான் ஹிட்லர், போர் வெறியை மக்களிடையே ஏற்படுத்தி, அதுவே 'தேச பக்தி' என நம்ப வைத்து, நேசப்படைகளுக்கு இராணுவத் தளவாடங்களை விற்று தன் நாட்டிற்கு வருமானத்தை வளர்த்தார். ஹிட்லரின் ஆரம்பக் காலத்தில், இது, ஜெர்மனி மக்களுக்கு நன்மை பயப்பது போலவும் இருந்தது. வேலை வாய்ப்பு கிடைத்தது. பணம் புழங்கியதால் உற்பத்திப் பொருள்களுக்கான கிராக்கியும் உயர்ந்தது. இதன் மூலம், அக்காலத்திய பொருளாதாரப் பெருமந்தத்தையும் ஜெர்மனியால் எதிர்கொள்ள முடிந்தது. ஹிட்லருக்கு ஜெர்மனி மக்களிடம் செல்வாக்கு பெருகியதற்கு இது மிகவும் முக்கியக் காரணம்.

*பேராசிரியர் பிரபாத் பட்நாயக்*

ஆனால் இன்று தேசங்களுக்கு அதுபோன்ற நிதி ஆதார வழி இல்லை. இப்போது மக்களிடம் பணம் புழங்கவோ, கிராக்கி அதிகரிக்கவோ வேண்டும் என்றால் அரசின் பொது முதலீடு அதிகரிக்க வேண்டும் இதற்கு இரண்டே வழிகள்தான் உள்ளன. ஒன்று, நிதி பற்றாக்குறை அதிகரிக்கப்பட வேண்டும் - அதாவது பொது முதலீடுக்காக அரசு கூடுதல் செலவு செய்திட வேண்டும் மற்றொன்று, பெரும் பணக்காரர்களின் சொத்துக்கள் மீதும் வருமானத்தின் மீதும் வரி விதிக்கப்பட வேண்டும். இதற்கு மாறாக தங்களது வருமானத்தின் பெரும் பகுதியை ஏற்கெனவே அரசாங்கத்தின் தேவைகளுக்காக செலவிட்டுக் கொண்டிருக்கும் உழைக்கும் மக்கள் மீது வரி விதிப்பதால் அவர்களது கைகளில் உள்ள கொஞ்ச நஞ்ச பணமும் பறிக்கப்பட்டு, அதனால் அவர்களது பணப்புழக்கம் குறைந்து, சந்தையில் கிராக்கி வீழ்ச்சியே ஏற்படும். எனவே இவர்கள் மீது வரி விதிப்பது பயனற்றது. எனினும் இந்த வழியைத்தான் முதலாளித்துவ அரசாங்கங்கள் பின்பற்றுகின்றன.

பட்ஜெட்டில் நிதிப் பற்றாக்குறையை அதிகரிப்பது (அதாவது, அரசு பொதுச் செலவினங்களை அதிகரிப்பது) மற்றும் பெரும் பணக்காரர்கள் மற்றும் கோர்ப்பரேட்களுக்கு அதிக வரிவிதிப்பது என்பது இன்றைய நவீன தாராளமயப் பொருளாதாரத்திற்கு வெறுப்பூட்டும் வார்த்தைகளாகும். நவீன தாராளமயக் கொள்கைகளின் உத்தரவின்படி, மூலதன குவியலுக்கு இடையூறாக விளங்கும் இந்த இரண்டு செயல்களையும் செய்யக்கூடாது. இந்த கொள்கையானது தேச நலனிற்கு, தேச மக்களின் நலனிற்கு முற்றிலும் விரோதமானது. அதே சமயம் பாசிச சக்திகள் எல்லா நாடுகளிலும், எல்லாக் காலங்களிலும் தேச மக்களுக்கும் தேச நலன்களுக்கும் விரோதமானவை. ஆகவே நிதி மூலதனமும் அதன் ஆதார சுருதியான நவீன தாராளமயக் கொள்கைகளும் பாசிச சக்திகளும் கைகோர்த்து பயணிக்கத் தொடங்கியுள்ளன.

**இந்தியாவின் சமகால பாசிசம்**

எனவே தான், இந்தியாவில் சமகால

பாசிசம், தேச நலனிற்கு எதிராக வெறுப்புணர்வை விதைத்து வளர்த்தெடுப்பது, எப்போதும் நாட்டில் ஓர் அச்சத்தைப் பரப்புவது மற்றும் அச்ச உளவியலை நிலவச் செய்வது என்பதைச் செய்து வருகிறது. குறிப்பாக, மிகவும் பலவீனமான சிறுபான்மைப் பிரிவு மக்களை எதிரிகளாக சித்தரித்து, அவர்களால் தான் தேசத்திற்கு பெரும் ஆபத்து என்று தங்களது பொய்ப்பிரச்சாரத்தால் நிஜம் என நம்ப வைப்பது பாசிசத்தின் உத்தி. ஜெர்மனியில் மிகவும் பலவீனமான யூத இன மக்களை இலட்சக்கணக்கில் விஷவாயுக் கூடங்களிலும் அடைத்துப் படுகொலை செய்த வரலாற்றை நாம் மறக்கக் கூடாது. இன்று இந்தியாவில் ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. பாசிச சக்திகள் சிறுபான்மை, பட்டியலின, பழங்குடியின மக்களை மற்றும் கம்யூனிஸ்டுகளை எதிரிகளாக சித்தரித்து, அவர்களின் மீதான வெறுப்புணர்வைக் கக்கி வருவதோடு, இந்தியா முழுவதும் ஏதாவதொரு பதற்ற நிலையில் தொடர்ந்து வைத்துக் கொண்டுள்ளது.

**இரட்டைத் தன்மையும் போலித்தனமும்**

இரட்டை நாக்கு மற்றும் போலித்தனம் இவற்றோடு சேர்ந்த பிடிவாதப் போக்கு - (dogmatic) இவை அனைத்தும் இன்றைய ஜூம்லா அரசியலுக்கு (தேர்தல் கால பொய் வாக்குறுதிகள் மூலமான மோசடி அரசியல்) மிகவும் தேவைப்படுகிறது. இந்திய நாட்டின் மக்களின் உண்மையான நலன்களை விட, தேசத்தின் நலன்களை விட இந்தக் கொள்கைகள் தான் நவீன - பாசிச அரசின் திட்டங்களுக்கு மிகவும் நம்பகத்தன்மையாக இருக்கின்றன. இந்த அபாயகரமான - கோரமான வடிவத்தை வைத்துக் கொண்டு தான் இந்த அரசு, 'தேச பக்தி' என்னும் வேறு முகத்தோடு மக்களை அணுகுகிறது. இந்த இரட்டைத்தன்மை மற்றும் போலித்தனம் என்கிற இரட்டைக்குழல் துப்பாக்கிகளைக் கொண்டு அடக்குமுறை மற்றும் பழிவாங்கும் அரசியலை நடத்தி வருகிறது இன்றைய பாசிச பாஜக அரசு.

**சமகால இந்திய பாசிசத்தின் பயங்கரமான கூறுகள்**

இரட்டைத்தன்மை/போலித்தனம் மற்றும் பாசாங்குத்தனம் (Hypocrasy) ஆகியவை உலகில் உள்ள அனைத்து பாசிச சக்திகளின் இயல்பான குணமாகும். ஆனால் அந்தந்த நாட்டிற்கென பிரத்யேக பாசிசக் கூறுகளும் இணையும் போது தான், அது தேச விரோத - மக்கள் விரோத கோர்ப்பரேட் கனவான்களுக்கு சாதகமான - தீயசக்தியாக உருகொள்கிறது. இந்தியாவில் சகிப்புத்தன்மையை வேரறுத்தல் மற்றும் மத பிடிவாதத் தன்மையை உருவாக்குதல் ஆகிய இரண்டும் இந்திய நாட்டு மக்களை மத ரீதியாக பிளவுபடுத்த பயன் படுத்தப்படும் பிரிவினைவாத செயல்வடிவங்கள். இவை நவீன கால அணுகுண்டுகளை விட மிகவும் ஆபத்தானவை. இந்த பாசிசக் கூறுகள் இந்திய மக்களிடையே "நாம்" மற்றும் "அவர்கள்" என்கிற பிரிவினையை ஏற்படுத்தி, மக்களை திசை திருப்பி, கூட்டுக் களவாணி முதலாளித்துவத்தை சட்டப்பூர்வமாக்கி ஆட்சி செய்கிறது. ஆக இந்தியாவில் தற்போது பாசிசமும் நவீன தாராளமயக் கொள்கைகளும் கைகோர்த்து தேசத்தின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்கு எதிராகவும், மக்களின் நலன்களுக்கும் சமூக வளர்ச்சிக்கும் எதிராகவும் செயல்பட்டு வருகிறது.

அதே போல், சிறுபான்மை மக்களுக்கு எதிராக பெரும்பான்மை மக்களைத் திருப்புவது என்பது கொஞ்சம் கொஞ்சமாக பெரும்பான்மை மக்களுக்குள்ளான பிரிவினையை ஏற்படுத்தும். இது புற்றுப்போல் பரவிப் பரவி ஒரே மதத்தின் பல குழுக்களுக்கிடையேயான மோதல்களாக வெடித்துச் சிதறும். இது வரையிலும் இந்தியாவில் அந்த நிலைமை வராமல் கடந்த கால ஆட்சியாளர்கள் பார்த்துக் கொண்டனர். ஆனால் தற்போது நடக்கும் நிகழ்வுகள் அதை நோக்கிச் சென்று கொண்டிருப்பதாக அச்சம் கொள்ளச் செய்கிறது. அடுத்தடுத்த அரசுகளும் பாசிச அரசுகளாகத் தான் அமைய வேண்டும் என்கிற வெறியில் இந்தக் கொள்கைகள் வெகு தீவிரமடையும் அபாயமும் உள்ளது.

உலகத்தில் எந்தெந்த நாடுகள் இவ்வாறு பிரிவினை வாதத்தை, மதவாதத்தை, இனவாதத்தை முன்னிறுத்தி பாசிச ஆட்சி நடத்தினவோ, அவையெல்லாம் மிகவும் கோரமான முடிவுகளைச் சந்தித்துள்ளன. அந்த நாடுகளின் பொருளாதாரம் படுகுழியில் வீழ்ந்து போனது. மக்கள் சொல்லொண்ணத் துயரில் ஆழ்ந்து போயினர். நம் முன்னால் பற்பல உதாரணங்கள் உள்ளன.

**அனைத்துக் கட்சிகளும் ஒன்றுபடுவதைத் தவிர வேறு வழியில்லை**

இத்தகைய இந்துத்துவா தீவிரவாதக் கொள்கைகளிடமிருந்து விடுபடுவது, தேசத்தைக் காப்பது என்பதற்கான போராட்டம் எளிதானதாக இருக்காது என்பதை இடதுசாரிகளும், முற்போக்கு சிந்தனையாளர்களும் மனதில் ஏற்றிக் கொள்ள வேண்டும். பாசிச சக்திகளும் நவீன தாராளமயவாதமும் கைகோர்த்து வலம் வருவதால், இவர்களை தேர்தல் மூலம் மட்டுமே நீக்குவது என்பது அவ்வளவு எளிதானது அல்ல. அப்படியே செய்தாலும் அது தனது இருப்பைத் தக்கவைத்துக் கொள்ள என்ன வேண்டுமானாலும் செய்யும். (சமீபத்தில் டிரம்ப் தேர்தலும், தோல்வியும் அதன் பின்னர் நடந்த நிகழ்வுகளையும் நாம் பார்த்தோம்)

இந்த கொடிய சக்திகளை தேர்தல் மூலம் வெளியேற்றுவதற்கு அனைத்து தேசிய மற்றும் பிராந்திய கட்சிகள் ஒன்றிணைய வேண்டும். அப்படி ஒன்று சேருவதற்கு நவீன தாராளமயமும், பாசிசமும் அவ்வளவு எளிதாக அனுமதிக்காது. இந்திய நாட்டின் ஜனநாயகத்தை மீட்டெடுத்தல் மற்றும் மக்களுக்கான உடனடி நிவாரணம் என்கிற இரண்டு கோஷங்களை இந்தியா முழுவதும், அனைத்துக் கட்சிகளும் ஒரே குரலில் ஒலிக்க வேண்டும். இந்த ஒற்றுமை என்பது மேலிருந்து மட்டுமே கட்டப்படும் ஒற்றுமையாக இருக்க முடியாது. இருக்கவும் கூடாது. இது சாதாரண ஜனத்திரள்களை திரட்டுவது, பாட்டாளி மக்களைத் திரட்டுவது, விவசாயப் பெருமக்களைத் திரட்டுவது, விவசாயத் தொழிலாளர்களைத் திரட்டுவதிலிருந்து தான் தொடங்க வேண்டும்.

சமீபத்தில் நடைபெற்ற விவசாயிகளின் எழுச்சியின் படிப்பினைகளை உள்வாங்கிக் கொண்டு மாபெரும் எழுச்சிகளை உருவாக்க வேண்டும். அதன் அடிப்படையில் தான் பூதாகரமாக எழுந்து வரும் பாசிச சக்திகளை வீழ்த்த முடியும்.

(தி டெலிகிராப் (The Telegraph) என்ற இந்திய ஆங்கில ஏட்டிற்கு *16.08.2022* பேராசிரியர் பிரபாத் பட்நாயக் (Professor Prabhat Patnaik) அளித்த நேர்காணலில் இருந்து)

**தமிழில் சுருக்கம் : வெ. ராகுல்ஜி**

**முன்பக்கத்தொடர்ச்சி…**

அவரால் வெற்றி பெற முடியவில்லை.

மறுபக்கத்தில் ஜே.வி.பி. தலைவர் அனுரகுமார திசநாயக்கவும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டார். ஆனால் அவரால் தனது கட்சியின் மூன்றே மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைத் தவிர வேறு எவரது ஆதரவையும் பெற முடியவில்லை.

ஆனால் ஐ.தே.க.வுக்கு ஒரேயொரு நாடாளுமன்ற உறுப்பினர் மட்டுமே இருந்தும் அக்கட்சியின் தலைவர் ரணில் அதிகப்படியான வாக்குகள் பெற்று எவ்வாறு ஜனாதிபதியாக வர முடிந்தது? தெட்டத் தெளிவாகத் தெரிகிற விடயம், சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் பெரும்பான்மையான நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரணிலுக்கு ஆதரவாக வாக்களித்ததின் மூலமே ரணில் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற முடிந்தது. இரகசிய வாக்கெடுப்பு என்றபடியால் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த சிலரும் ரணிலுக்கு ஆதரவாக வாக்களித்திருக்கக்கூடும். அதை ரணிலே பகிரங்கமாகச் சொல்லியும் இருக்கிறார்.

இப்பொழுது ஜே.வி.பி. உட்பட எதிர்க் கட்சிகள் சிலவும் ரணில் தனது ஜனாதிபதி பதவியைத் துறந்து வீட்டுக்குப் போக வேண்டும் என மீண்டும் வலியுறுத்த ஆரம்பித்துள்ளனர். முதலாவதாக, ரணில் முறைப்படி ஜனாதிபதியாகத் தெரிவாகவில்லை என நீங்கள் வாதிப்பதானால், நீங்களும் ஜனாதிபதி தேர்தலில் பங்குபற்றாமல் அதை நிராகரித்திருக்க வேண்டும் என மற்றவர்களால் வாதிக்க முடியும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அவ்வாறு செய்யாமல் அரசியல் அமைப்பின் பிரகாரம் நீங்களும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டுவிட்டு, இப்பொழுது அதில் முறைப்படி தெரிவான ரணில் பதவியைத் துறக்க வேண்டும் எனக் கோருவது தவறானது மட்டுமல்ல அராஜகமும் கூட.

உண்மை இப்பொழுது எல்லோருக்கும் நன்கு தெரியும். முன்னைய ராஜபக்ச ஆட்சியாளர்களுக்கு எதிரான கிளர்ச்சி நாட்டு மக்களின் சார்பாக இளைஞர்களால் தன்னெழுச்சியாக ஆரம்பிக்கப்பட்டது என பிரச்சாரம் செய்தார்கள். ஆனால் அது அப்பட்டமான பொய். ஜே.வி.பியும் அதில் இருந்து சென்று முன்னிலை சோசலிச கட்சி என்ற கட்சியை உருவாக்கியவர்களுமே இந்தக் கிளர்ச்சியினதும், வன்முறைகளினதும் பின்னணிச் சூத்திரதாரிகள். இவர்களுக்கு பணம் உட்பட பல விதமான பின்னணி உதவிகளையும் வழங்கியவர்கள் மேற்கத்தை முதலாளித்துவ நாடுகள் என்ற உண்மை இப்பொழுது வெளிச்சத்துக்கு வந்துள்ளது (சீன எதிர்ப்புக் காரணமாக இந்தியாவுக்கும் இதில் பங்கு இருந்திருக்கும் என்ற கருத்தை நிராகரித்து விட முடியாது)

இந்த இடத்தில் சிலருக்கு ஒரு கேள்வி எழலாம். ரணில் மேற்கத்தைய முதலாளித்துவ நாடுகளின் நீண்டகால நண்பன். ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் - பொருளாதாரக் கொள்கைகள் மேற்கு நாடுகளுடையதை ஒத்தது. அப்படியிருக்க மேற்கு நாடுகளால் ஆதரிக்கப்படும் கிளர்ச்சிக்காரர்கள் ஏன் அதே மேற்கு நாடுகளின் ஆதரவாளரான ரணிலையும் பதவி விலகக் கோருகிறார்கள் என்பதே அந்தக் கேள்வி.

உண்மை என்னவென்றால், ரணில் ஐக்கிய தேசியக் கட்சியின் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவுடன் ஜனாதிபதி ஆகியிருந்தால், ரணிலை மேற்கு நாடுகள் கண்ணை மூடிக்கொண்டு ஆதரித்திருக்கும். ஆனால் ரணிலோ சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவுடன் ஜனாதிபதியாக வந்துள்ளதுடன், தனது பதவிக் காலம் முழுவதும் பெரமுனவின் ஆதரவிலேயே தங்கியிருக்கப் போகிறார். அதாவது, மறைமுகமாக ரணில் என்ற பெயருடன் பெரமுனவின் ஆட்சியே தொடரப் போகின்றது. அதனால்தான் தற்போதைய ரணிலை மேற்கு நாடுகளுக்குப் பிடிக்கவில்லை. எனவேதான் தமது ஆட்சி மாற்றக் கனவு நனவாகவில்லை என்ற கவலையிலும் விரக்தியிலும் அவர்கள் இருந்து கொண்டு செயல்படுகிறார்கள். (அது மாத்திரமின்றி, தற்போதைய ரணில் முன்னைய காலங்களைப் போல மேற்கு நாடுகளுக்குச் சார்பான கொள்கையை கண்ணை மூடிக்கொண்டு பின்பற்ற மாட்டார் என்பதற்கு சில மாதங்களுக்கு முன்னர் அவர் ரஸ்ய – உக்ரைன் மோதல் குறித்து ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய தெளிவான பேட்டி ஒரு உதாரணம்)

எனவே, ரணிலுக்கு பதிலாக மேற்கு நாடுகளின் தற்போதைய தெரிவு சஜித் பிரேமதாசவே என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. அதனால்தான் ஐ.தே.கவின் பெரும் பகுதியினர் மட்டுமின்றி, இலங்கையின் சிறுபான்மை இனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சகல பிற்போக்கு கட்சிகளும் சஜித் பிரேமதாசவுடன் கூட்டு வைத்திருக்கிறார்கள்.

இந்த விடயத்தில் மேற்கு நாடுகள் ஒரு இரட்டைத் தந்திரோபாயத்தைக் கையாளுகிறார்கள். அதாவது, சஜித் பிரேமதாசவின் கட்சியை வன்முறைகளில் ஈடுபடாத, ஜனநாயக நெறிமுறைகளைப் பின்பற்றும் ஒரு கட்சியாகப் பேணி வருகிறார்கள். ஏனெனில், வன்முறையில் ஈடுபடும் ஒரு கட்சியை தேர்தல்களில் மக்கள் ஆதரிக்கமாட்டார்கள். அதன் மூலம் வருங்கால ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களில் சஜித்தின் கட்சியை வெற்றிபெற வைப்பதே அவர்களது பிரதான நோக்கம். ஆனால் தேர்தல்களுக்கு பல வருடங்கள் இருப்பதால் அவர்களது அவசரம் பொறுமை இழக்கச் செய்கிறது. அது தவிர, அவர்களுக்கு ஒரு சந்தேகமும் இருக்கிறது. அதாவது, அடுத்த தேர்களிலும் பொதுஜன பெரமுனவே வெற்றி பெற்று விடுமோ என்ற சந்தேகமே அது.

அதனால்தான், மேற்கு நாடுகள் இன்னொரு வழிமுறையையும் கையாளுகிறார்கள். அதற்காக அவர்கள் ஜே.வி.பி. மற்றும் முன்னிலை சோசலிசக் கட்சிகள் மூலம் தற்போதைய ரணில் தலைமையிலான அரசுக்கெதிராகவும் வன்முறைகளைத் தூண்டி ஆட்சியை மாற்ற முயல்கிறார்கள். அதாவது, அந்த வழி இல்லையேல் இந்த வழி, என்றதொரு நிலை.

இங்கு கவனிக்க வேண்டிய விடயம் ஒன்றுள்ளது. ஜே.வி.பியும் ஏனைய எதிர்க்கட்சிகளும் நாடு எதிர் நோக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதானால் சர்வ கட்சி அரசாங்கம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என முதலில் கோரினார்கள். அதற்கு ரணில் அரசு செவிசாய்த்து சர்வகட்சி அரசு அமைப்பதற்கு முன்வரும்படி சகல அரசியல் கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்தது. ஆனால் தற்பொழுது ஜே.வி.பி. உட்பட சில எதிர்க் கட்சிகள் அதற்கு மறுப்பு தெரிவித்து வருகின்றன. (காரணம் உள் நோக்கம் கொண்டது. அதாவது, சர்வ கட்சி அரசு அமைந்தாலும் அதில் பொதுஜன பெரமுனவே ஆதிக்கம் செலுத்தும் என்ற பயம்)

பதிலுக்கு நாட்டில் புதிதாக ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்ற தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என ஜே.வி.பி.

இப்பொழுது புதிய கோரிக்கை ஒன்றை முன்வைத்து பிரச்சாரம் செய்து வருகிறது. இதன் நோக்கம் இந்தத் தேர்தல்கள் மூலம் ஜனாதிபதி பதவியையும், நாடாளுமன்ற அதிகாரத்தையும் கைப்பற்றி விடலாம் என ஜே.வி.பி. நம்புவதால் அல்ல. ஏனெனில், ஜே.வி.பியின் பலம் என்ன என்பது அவர்களுக்கும் தெரியும், நாட்டு மக்களுக்கும் தெரியும். சந்திரிக ஜனாதிபதியாக இருந்தபொழுது அவரது தயவால் 37 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருந்த ஜே.வி.பி., 'கழுதை தேய்ந்து கட்டெறும்பான' கதையாக தற்போதைய நாடாளுமன்றத்தில் வெறும் 3 உறுப்பினர்களையே கொண்டிருக்கிறது. இந்த நிலைமையில் இன்னொரு தேர்தல் நடந்தால் அவர்களது எண்ணிக்கை ஒன்றாக அல்லது பூஜ்யமாக வீழ்ச்சி காண்பதற்கே வாய்ப்புண்டு.

ஆனாலும், ஜே.வி.பி. புதிதாகத் தேர்தல்களை நடத்தும்படி கோருவதற்கு காரணம் உண்டு. அப்படி நடந்தால் சில வேளைகளில் சஜித் பிரேமதாச ஆட்சிக்கு வரலாம் என்ற நப்பாசைதான். அதன் மூலம் இரண்டு விடயங்கள் நிறைவேற வாய்ப்புண்டு. ஒன்று, ஜே.வி.பியைத் தற்போது கையாளும் மேற்கு நாடுகளுக்கு உகந்த ஆட்சி அமையும். இன்னொன்று, 'நல்லாட்சி' காலத்தில் ஜே.வி.பி. செய்தது போன்று சஜித்தின் தோளில் ஏறி சவாரி செய்யலாம் என்ற ஜே.வி.பியின் மனக்கோட்டை.

ஆனால், அது ஒருபோதும் நடைபெறப் போவதில்லை. ஏனெனில், அரசியல் அமைப்பின் பிரகாரம், கோத்தபாய விட்டுச் சென்ற ஜனாதிபதி பதவியின் எஞ்சிய காலத்தை (சுமார் இரண்டரை வருடங்கள்) ரணில் விக்கிரமசிங்க பூர்த்தி செய்த பின்னரே ஜனாதிபதி தேர்தல் நடைபெறும்.

அதுபோல, தற்போதைய நாடாளுமன்றத்தின் ஆயுட்காலம் முடிந்த பின்னரே நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறும். அதுவரையும் மேற்கு நாடுகளும், ஜே.வி.பியும் பொறுமையாக இருப்பதே புத்திசாலித்தனம்.

அப்படியில்லாமல், ஜே.வி.பியும், முன்னிலை சோசலிசக் கட்சியும் ராஜபக்சாக்களை வன்முறை மூலம் ஆட்சியை விட்டு விரட்டியது போல ரணிலையும் விரட்ட எண்ணினால், அப்பொழுது ரணில் யார் என்ற விடயம் அவர்களுக்குத் தெரிய வரும். ஏனெனில், ரணில் என்ற தனி மனிதன் மட்டுமின்றி, கடந்த காலத்தில் இலங்கையின் ஆட்சி அதிகாரத்தில் இருந்த ரணிலின் ஐ.தே.கவும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் இன்றைய நீட்சியான பொதுஜன பெரமுனவும் இன்று ஒன்றாக சங்கமமாகி புதிய வீரியத்துடன் இருக்கின்றன.

---

சோசலிசத்தில் முதலாளித்துவ உரிமை அதன் முழு அளவிலும் ஒழிக்கப்படுவதில்லை. பகுதி அளவுக்கே. இதுகாறும் உருப்பெற்றுள்ள பொருளாதார புரட்சிக்கு ஏற்ற அளவுக்கே அதாவது உற்பத்தி சாதனங்களை பொறுத்தமட்டிலுமே ஒழிக்கப்படுகிறது. முதலாளித்துவ உரிமை இவற்றை தனிநபருடைய தனி உரிமையாய் அங்கீகரிக்கிறது. சோசலிசம் இவற்றை பொதுவுடைமையாய் மாற்றுகிறது. அந்த அளவுக்கு – அந்த அளவுக்கு – மட்டுமே முதலாளித்துவ உரிமை மறைகிறது. இதற்கு அடுத்த உயர் கட்டமான கம்யூனிச சமுதாயத்தில்தான் அரசு பூரணமாய் உலர்ந்து உதிரத் தொடங்கும். கம்யூனிச சமுதாயத்தில்தான் முதலாளிகளுடைய எதிர்ப்பு அடியோடு நசுக்கப்பட்டு முதலாளிகள் மறைந்துபோய் வர்க்கங்கள் இல்லாமல் போய்விடும். அப்பொழுதுதான் முழு நிறைவான ஜனநாயகம் விதிவிலக்கு எதுவுமில்லாத ஜனநாயகம் சாத்தியமாகும்.

**லெனின்**

---

**4ம் பக்கத்தொடர்ச்சி...**

ரஷ்யாவின் மீர் அட்டையைப் (Mir Card) பயன்படுத்துவதில் ஏற்கனவே துருக்கியே முன்னணியில் உள்ளது. இந்த அட்டையை வியட்நாம், ஆர்மீனியா, உஸ்பெகிஸ்தான், பெலாரஸ், கஜகிஸ்தான், கிர்கிஸ்தான், தஜிகிஸ்தான், தெற்கு ஓசெட்டியா மற்றும் அப்காசியா ஆகிய நாடுகளும் பயன்படுத்தி வருகின்றன. விசா உள்ளிட்ட பல்வேறு கடன் அட்டை நிறுவனங்கள் ரஷ்யாவில் தங்கள் அட்டைகள் செல்லாது என்று ஏற்கனவே அறிவித்தன. இந்நிலையில் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய அட்டைகளுக்கு மாற்றாக ரஷ்யாவின் மீர் அட்டைகள் புழக்கத்தில் உள்ளன.

ரஷ்யா மற்றும் துருக்கியின் மத்திய வங்கிகளின் தலைவர்கள் மற்றும் அதிகாரிகள் சந்தித்துப் பேசியிருக்கிறார்கள். விளாடிமீர் புட்டினுடனான சந்திப்பில் துருக்கியில் உள்ள அக்குயு (Akkuyu) அணுமின் நிலையத்தின் கட்டுமானப் பணிகள் பற்றியும் பேசியிருக்கிறார்கள். இந்த ஒப்பந்தம் கைச்சாத்திட்டு ஒரு வாரத்தின் பின்னர் அணுமின் நிலையம் அமையும் இடத்திற்கு எர்டோகன் பயணம் மேற்கொண்டுள்ளார். இந்த மின் நிலையத்தின் கட்டுமானப் பணிகளுக்கு ரஷ்யா உதவி செய்யவிருக்கிறது. இதற்கு ரஷ்யத்தரப்பில் ஒப்புதலும் தெரிவித்திருக்கிறார்கள்.

**டொலர் தவிர்ப்பு**

ரஷ்யாவோடு, சீனா, சவூதி அரேபியா, ஈரான் உள்ளிட்ட நாடுகள் டொலரைக் கைவிட்டுவிட்டு, மாற்று நாணயங்களைப் பயன்படுத்துவது பற்றி ஆலோசனை செய்து வருகின்றன. கடந்த ஆண்டு மார்ச் மாதத்தின் அறிக்கையின்படி, டொலரோடு சேர்ந்த யூரோ, ஸ்டெர்லிங் பவுண்ட் (பிரிட்டன்), யென் (ஜப்பான்) மற்றும் யுவான்(சீனா) ஆகிய நான்கு நாணயங்களும் பன்னாட்டுப் பரிவர்த்தனைகளுக்குப் பயன்படுத்தலாம் என்று சர்வதேச நிதி அமைப்பு (ஐ.எம்.எப்) கூறியுள்ளது.

---

**11ம் பக்கத்தொடர்ச்சி...**

டயஸ் பண்டாரநாயக்க, அனுர பண்டாரநாயக்க போன்ற வலதுசாரிகளின் கை ஓங்கியது. அவர்கள் இடதுசாரிக் கட்சிகளின் அமைச்சர்களின் செயல்பாடுகளில் தலையீடுகளை மேற்கொண்டனர். இதனால் ஒருபுறத்தில் சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், மறுபுறத்தில் லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி என்பனவற்றுக்கும் இடையில் முரண்பாடுகள் வளர்ந்து இடதுசாரிக் கட்சிகள் இரண்டும் அரசை விட்டு வெளியேறின. இது ஐ.தே.கவுக்கும் தமிழ் பிற்போக்கு சக்திகளுக்கும் வாய்ப்பாக அமைந்துவிட்டது.

அதனால் சுதந்திரக் கட்சியும் இடதுசாரிக் கட்சிகளும் 1977 பொதுத் தேர்தலில் தனித்தனி அணிகளாகப் போட்டியிட்டன. அதன் காரணமாக, 1956 தேர்தலில் ஐ.தே.க. எட்டு ஆசனங்கள் மட்டும் எடுத்தது போல, 1977 தேர்தலில் சுதந்திரக் கட்சியும் எட்டே எட்டு ஆசனங்களை மட்டும் வென்றது. இடதுசாரிக் கட்சிகள் வரலாற்றில் முதல் தடவையாக ஆசனங்கள் எதுவும் கிடைக்காமல் நாடாளுமன்றத்துக்கு வெளியே விடப்பட்டன. மறுபக்கத்தில் ஐ.தே.க. ஆறில் ஐந்து பெரும்பான்மை பெற்று அடுத்து வந்த 17 வருடங்களுக்கு தனது தனது எதேச்சாதிகார ஆட்சியை ஸ்தாபித்துக் கொண்டது.

# வறுமை ஒழிப்பில் சாதனை



**2022** ஆம் ஆண்டுக்கான ஐக்கிய நாடுகள் வளர்ச்சி இலக்குகள் அறிக்கை ஜூலை 7 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது. இதன்படி, நடப்பாண்டில் 7 கோடியே 50 இலட்சம் பேர் முதல் 9 கோடியே 50 இலட்சம் பேர் வரையில் புதிதாக கடுமையான வறுமையால் நடப்பாண்டில் பாதிக்கப்படப் போகிறார்கள். வறுமை ஒழிப்பில் சீனாவின் சாதனையால் ஒட்டுமொத்த உலகின் வறுமை பாதிப்பு குறைந்துள்ளது. நவம்பர் 23, 2020 அன்று, சீனா வெளியிட்ட அறிக்கையின்படி, சுமார் 10 கோடிப் பேரை கடுமையான வறுமையில் இருந்து மீட்டெடுத்திருக்கிறார்கள். இதன்மூலம் சீனாவில் கடுமையான வறுமை என்பது ஒழிக்கப்பட்டுள்ளது.

உலகப் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதில் சீனாவின் பங்களிப்பு வியக்கத்தக்கது என்று உலகப் பொருளாதாரக் கழகத்தின் தலைவர் போர்ஜ் பிரெண்ட் பாராட்டுத் தெரிவித்துள்ளார். உலகப் பொருளாதாரம் குறித்துக் கருத்து தெரிவித்த போர்ஜ் பிரெண்ட், "சீனாவில் தற்போது என்ன நடந்து கொண்டிருக்கிறதோ, அது உலகின் மற்ற நாடுகளின் மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. உலகின் இரண்டாவது பெரிய பொருளாதாரமாக சீனா இருப்பதால் இந்தத் தாக்கம் தொடரும். சீனா மற்றும் அந்நாட்டின் நிர்வாகம் எடுத்துள்ள நடவடிக்கைகள் வளர்ச்சியை மீட்டெடுக்க உதவும் என்று எதிர்பார்க்கிறோம். வரும் ஆண்டு உலகப் பொருளாதாரத்திற்கு நன்றாக இருக்கும்'' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

2022 ஆம் ஆண்டில் முதல் அரையாண்டில் சீனாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 2.5 விழுக்காடு விரிவடைந்திருப்பதைச் சுட்டிக்காட்டியே அவர் இவ்வாறு கூறியுள்ளார். உலக அளவிலான பொருளாதார வளர்ச்சி வேகம் இழந்திருக்கிறது. இதன் தாக்கம் சீனா மீதும் இருக்கும். அதையும் மீறி சீனாவின் பொருளாதாரம் வளர்ந்துள்ளது நோர்வே நாட்டின் முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சரும், தற்போது உலகப் பொருளாதாரக் கழகத்தின் தலைவராகவும் இருக்கும் போர்ஜ் பிரெண்ட் குறிப்பிடுகிறார். ஐ.எம்.எப் (சர்வதேச நிதி அமைப்பு) வெளியிட்டுள்ள புள்ளிவிபரங்களின்படி, உலக அளவிலான பொருளாதார வளர்ச்சி எதிர்பார்த்ததை விடக் குறைவாகவே வளரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனவரியில் வெளியான கணிப்பை விட 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் வளர்ச்சி முறையே 0.8 மற்றும் 0.2 விழுக்காடு குறைவாகவே இருக்கப் போகிறது. இந்த நெருக்கடியிலும் பெரும் சரிவு ஏற்படாமல் உலக நாடுகளை சீனா பாதுகாத்திருக்கிறது என்கிறார் போர்ஜ் பிரெண்ட். இலாபத்தில் ஐரோப்பிய நிறுவனங்கள் சீனாவின் சந்தை உள்நாட்டு நிறுவனங்களுக்கு மட்டுமில்லாமல் வெளிநாட்டு நிறுவனங்களுக்கும் பலனைத் தந்துள்ளது. ஐரோப்பிய ஒன்றிய வர்த்தகக் கவுன்சிலின் அறிக்கையை சுட்டிக்காட்டும் பிரெண்ட், ''2021 ஆம் ஆண்டில் பெரும்பாலான ஐரோப்பிய நிறுவனங்கள் இலாபத்தைச் சம்பாதித்துள்ளன. சீனாவின் சந்தை அவர்களுக்கு பெரும் அளவில் உதவியுள்ளது'' என்கிறார். கடந்த 30 ஆண்டுகளில் வேறு எந்த நாடும் காணாத வளர்ச்சியை சீனா அடைந்திருக்கிறது. வறுமை ஒழிப்பிலும் பெரும் சாதனையைப் படைத்திருக்கிறது. உலக வளர்ச்சியில் இவையனைத்தும் சாதகமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன.

வறுமை ஒழிப்பை நிறைவேற்றி, ஒவ்வொருவரையும் குறிப்பிட்ட வசதியான சமூகத்தில் சேர்க்க சீனா முயற்சி எடுத்து வருகிறது. இந்த இலக்குகளை நனவாக்க முடியும் என்பது பெருமளவில் விவசாயிகளின் வாழ்க்கைத் தர மேம்பாட்டைச் சார்ந்திருக்கிறது. கிராமப்புறங்களில் விவசாயிகள், நன்மை பெற்று, மகிழ்ச்சியான மற்றும் பாதுகாப்பான வாழ்க்கையை வாழ்ந்து வருவது என்பது இறுதியான இலக்கு ஆகும்.

சீனாவின் அதியுயர் தலைவர், பலமுறை கிராமப்புறங்களில் நேரில் சென்று களஆய்வு செய்து, வறுமை ஒழிப்புப் பணியில் மிகுந்த கவனம் செலுத்துவது, இந்த இலக்குகளை நனவாக்குவதற்கு மனவுறுதியை வெளிக்காட்டுகிறது. குறிப்பாக, சான்ஷி மாநிலப் பயணத்தில், ஷிச்சின்பிங் முதலில் வறுமை ஒழிப்புப் பணியை ஆய்வு செய்ததில் இருந்து, வறுமை ஒழிப்பு பணிக்கு முடுக்கி விடப்பட்டுள்ளது.

தற்போது, சீனாவின் பல்வேறு இடங்களில் வறுமை நிவாரணம் மற்றும் வறுமை ஒழிப்புப் பணிகள் விறுவிறுப்பாக நடந்து வருகின்றன. இதனிடையில், வெவ்வேறு கிராமங்களில், வெவ்வேறு நிலைமையின்படி, வெவ்வேறு வறுமை ஒழிப்புத் திட்டங்கள் நடைமுறையில் கொண்டு வரப்பட்டுள்ளன.